உ

# அருள் ஒளி



துர்க்காபுரம் மகளிர் இல்லம்

31வது ஆண்டு நிறைவுச் சிறப்பு வெளியீடு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

2013

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்





உ

# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)



ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்

ஆனி மாத மலர்
2013

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

பதிவு இல. : QD / 74 / NEWS / 2006Y

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
18 JUL 2013

# மாதர்கள் வாழ்வை மேம்படுத்திய துர்க்காபுரம் மகளிர் இல்லம்

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தை மிகவும் பெறுமதியானது. இறைபணி என்பது இதுதான் எனத் தன் தூய சமூகப் பணிகள் மூலம் எம் மண்ணில் நிரூபித்தவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்கள். அன்னையின் சிந்தனையில் எழுந்த பெண்களைப் பேணும் தொண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லமாக உயிர்பெற்றது. 1982ஆம் ஆண்டு துர்க்காதேவியின் திருவருளால் ஒரு சில பெண் பிள்ளைகளோடு ஆரம்பித்த இல்லம் விரைவாக வளர்ச்சி பெற்றுப் பலரது பாராட்டையும் பெற்றது. துர்க்காதேவியின் நிழலில் வாழும் பேறுபெற்ற சிறுமிகள் கல்வியிலும் கலை ஆர்வத்திலும் தொண்டிலிலும் உன்னத வளர்ச்சியைச் சந்தித்தனர். மாணவிகள் பலர் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்றனர். பல்கலைக்கழக அனுமதி பெற்று சாதனை நிலைநாட்டினர். மகளிர் இல்லத்துக்கு உதவும் கரங்களாக புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்பவர்கள் உள்நாட்டு அன்பர்கள் உறுதுணை செய்தனர். போரின் தாண்டவம் தெல்லிப்பழையை முற்றுகையிட்டது. மகளிர் இல்லச் சிறுமி எறிகணை வீச்சில் அகப்பட்டு இறந்தார். அன்னை மகளிர் இல்லப் பிள்ளைகளோடு இடம்பெயர்ந்து மிகவும் கஷ்டப்பட்டார்கள். கோழி தன் குஞ்சுகளை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

இறக்கைக்குள் காப்பாற்றுவது போல் அடைக்கலமாக வந்த பிள்ளைகளை அரவணைத்து ஆபத்து நேரத்திலும் பல இடங்கள் அலைந்து காப்பாற்றினார். அன்னையின் தலைமையில் தேவஸ்தானம் மகளிர் இல்லப் பணிகளை விஸ்தரிப்பதில் அக்கறை செலுத்தியது. மகளிர் இல்லப் பிள்ளைகளின் தேவைகள் யாவும் பூரணமாக நிறைவேற்றப் பட்டது. மகளிர் இல்லப் பிள்ளைகளின் வாழ்வுக்கு, மகளிர் இல்லத்தில் இணைந்து பணியாற்றிய அத்தனை பணியாளரும் மிகவும் விசுவாசமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றினர்.

2008ஆம் ஆண்டு அன்னை இறையடி சேர்ந்தவேளை, பிள்ளைகள் அனைவரும் கதறினர். அக் காட்சியைக் கண்டவர்கள் கண்ணீர் மல்கினர். மகளிர் இல்லப் பணிகள் குறைவின்றி நிறைவாக நடைபெறத் தொடர்ந்து பலர் ஆதரவு வழங்கினர். வன்னிப் போரின் அனர்த்தத்தால் மாணவர் தொகை இருமடங்காகியது. என் செய்வோம்? மிகச் சிறிய வயதில் தாயைப் பறிகொடுத்த அப்பாவிப் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுத்தோம். மகளிர் இல்லத்துக்கு அன்னை இருமாடிக் கட்டடம் கட்டிப் பாதுகாத்து வந்தார். சிறுமிகள் தொகை அதிகரித்தமையால் ஆலய தென்திசையில் புதிய விடுதிச்சாலை உருவாக்கப்பட்டு மகளிர் இல்லம் இன்று விருட்சமாக வளர்ந்து காட்சியளிக்கிறது. சைவ சமயத்தவர்களின் வரலாற்றில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பெருமைக்கு மகளிர் இல்லமும் முக்கிய இடத்தை வகித்து நிற்பது யாவரும் அறிந்த உண்மை. மகளிர் இல்லப் பிள்ளைகள் அம்பாளின் பிள்ளைகள். அவர்கள் ஆதரவற்றவர்கள் அல்ல என்பதை அவர்களின் மகிழ்ச்சியும் சிறப்பும் என்றும் உணர்த்துகிறது.

– ஆசிரியர்

# திருவாதவூரருடைய அச்சமும் அஞ்சாமையும்

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

திருவாதவூர் அடிகளாருக்கு ஏற்பட்ட அச்சமும் பச்சமும் திருவாசகம் என்னும் தேனில் தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அச்சம் என்பது அஞ்சுதல் – பயப்படுதல். பச்சம் – பரிதல் அல்லது அன்பு செய்தல்.

அச்சத்திற்கு எதிர்மாறு அஞ்சாமை, அஞ்சாமை இங்கு அன்பு செய்தல் அல்லது அன்பு பாராட்டுதல் என்று கொள்ளப்படுகிறது.

திருவாதவூர் அடிகள் முன்பு திருவாசகம் திருச்சதகத்தில் "யார்க்கும் குடி அல்லோம், யாதும் அஞ்சோம் – " (30) என்று வீரம் விண்டு பாடியவர். பின்பு திருவாசகம் அச்சப்பத்து என்னும் திருப்பதிகத்தில் அச்சத்திற்கு முன்னுரிமை கொடுத்துப் பாடுகின்றார். அஞ்சாமைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடிய அடிகளார் அச்சத்தை முன்வைத்துப் பாடியதனால் அப்பதிகம் அச்சப் பத்து என்று பெயர் பெற்று அழைக்கப்படுகின்றது.

பெரிய புராணம் – திருக்கூட்டச் சிறப்பில் அடியார் அஞ்சாமையைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விளக்குவார் :

**பூத மைந்து நிலையிற் கலங்கினும்**
**மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காத லுறைப்பி னெறி நின்றார்**
**கோதி லாத குணப்பெருங் குன்றனார் (7)**

**ஆரங் கண்டிகை யடையுங் கந்தையே பார மீசன்**
**பணியல தொன்றிலார்**
**ஈர வன்பினர் யாதுங் குறைவிலார்**
**வீர மென்னால் விளம்புந் தகையதோ (9)**

திருநாவுக்கரசு நாயனாரும் ஐயனுக்கு ஆட்பட்ட அன்பர்களைப் பாடும் போது அச்சத்தைத் தவிர்த்தே பாடுகின்றார்.

**"...... உடையார் ஒருவர் தமர்நாம்**
**அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை**

– திருவதிகை வீரட்டானப் பதிகம்.

மாணிக்கவாசக சுவாமிகள் உலகியலோடு இணைத்து அச்சத்தைக் காட்டுகின்றார். ஆனாலும் 'அந்த அச்சம் சிவ பரம்பொருளை மறுப்பவர், மறப்பவர் மேல் எழுகின்றது. 'பரிதி வானொளியாய் நின்பாதமே அல்லால் பற்றுநான் மற்றிலேன் கண்டாய்' என்று பெருமானுடைய பாதங்களைப் பற்றுக்கோடாகப் பற்றியவருக்குப் பயம் வா என்றாலும் வாராது. ஆனால் முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளைப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப் பெற்றியனை விலக்குவாரிடத்தில் அச்சம் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்? பக்தியால் பண்படுத்தப்பட்ட நுண்மை மிக்க உள்ளம் அல்லவோ அது!

**"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்**
**தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்**

மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்(டு)
ஊன மொன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே
அவர்கள்

'மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும்
நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ரன்றோ!!

"ஆயிடை வானப் பேரியாற்று அகவலின்
பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்து
சுழித்து எம் பந்தமாக் கரைபொருது அலைத்திடித்து
ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்(து)
உரு அருந்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டு
தொண்ட உழவர் ஆர பெற்றவர் அல்லவா
வாதவூரர்.

"..... கருணையினால்,
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்று உன் பெய்கழல் அடிகாட்டிடக் கண்டு
கொண்டவர் அல்லவா திருவாதவூரடி
களார்.

பொய்யா நாவதனால் பெரும்பத்தர் மெய்யான தேன்மொழியில் திருவருள் கலந்து தித்திக்குமாறு பாடுகின்றார்.

"அரவிற்கு அஞ்சமாட்டேன். பொய்யர்கள் புகலும் மெய்யிற்கும் அஞ்ச மாட்டேன். ஆனால் நெற்றிக் கண்ணுடைய சிவபெருமானுடைய திருவடியை அடைந்து அவருக்கு வேறாகக் கடவுள் இருப்பதாக நினைந்து பிறகடவுள் பற்று நீங்காதவரைக் கண்டால் நாம் அஞ்சுகின்றோம்.

"என்னை ஆட்டிப் படைக்கும் ஆசைக்கு அஞ்சமாட்டேன். வினைக்கடல் என்னை வெருட்டினாலும் அஞ்சுவேன் அல்லன். நாரணன் நான்முகன் முயன்றுங் காணாத தனக்குத் தானே நிகரான கடவுளுடைய திருவடிவத்தை அல்லாமல் மற்றொரு தேவரைத் தேவரென்று வெறுப்புக் கொள்ளாதவரைக் கண்டால் நாம் அஞ்சுகின்றோம்.

"உயிர் கொள்ளும் வேலுக்கும் அஞ்சோம். கன்னியர் கடைக்கண் பார்வைக்கு அஞ்சமாட்டோம். என்னுடைய மாணிக்கம் போலும் குருமணியைக் குடும்பிட்டுத் திருவருளைச் சேவிக்க மாட்டாத அன்பில்லாதவரைக் காணில் அஞ்சுகின்றோம்.

கன்னியருடைய சொல் மயக்கத்திற்கு அஞ்சமாட்டோம். அவர்களுடைய மயக்கச் சிரிப்பிற்கு அஞ்ச மாட்டோம். ஆனால் சிவபெருமானுடைய திருவடியைச் சேவித்துக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் தன்மை இல்லாதவரை எதிர்ப் பட்டால் அஞ்சுவோம்.

நோய் கண்டு அஞ்சுவோம் அல்லோம். பிறப்பிற்கும் இறப்பிற்கும் அஞ்சோம். பிறைசூடிப் பெருமானுடைய திருவடிகளை வாழ்த்தித் திருவெண்ணீறு அணிய அஞ்சுவாரைக் காணில் நாம் அச்சம் அடைவோம்.

நெருப்பிற்கு அஞ்சுவேனல்லேன். மலை புரண்டாலும் அஞ்சமாட்டேன். திருநீறு அணிந்தவராக இடப வாகனராக சொற்பதங் கடந்த சோதியாகத் தோற்றும் பெரும் பிச்சுத் தரும் பிரானுடைய திருவடித்தாமரைகளைச் சிரசில் சூட்டி அகம் நெகமாட்டாவரைக் காணில் நாம் அஞ்சுதும்.

"பழியைப் பார்த்து அஞ்சேன். இறப்பிற்கு அஞ்சேன். அக்கினி தாங்கிய திருக்கரத்துடன் பொற்சபையில் பொலிவுடன் கூத்தியற்றும் மொட்டார்கொன்றை சூடிப் பிரானைக் கழல் கூப்பிக் காணமாட்டாதவரைக் காண நேரிட்டால் நாம் அஞ்சுவோம்.

"யானையைக் கண்டு அஞ்சோம். புலிக்கும் அஞ்சோம். சிவபெருமானுடைய தேவரும் காணாத் திருவடி மலர்களை வாழ்த்தி ஏத்தி வணங்கமாட்டாத ஞானமில்லிகளை நாடின் நாம் அஞ்சுவோம்.

"இடிக்கு அஞ்சுவோமல்லோம். அரசர் நட்பிற்கும் அஞ்சோம். ஆலமே அமுதாக் கொண்ட அப்பனை நம்மை ஆட்கொண்ட அப்பனுடைய திருநீற்றைத் தரிக்க அஞ்சும் அறிவில்லாதவர்களைக் காணுமிடத்து நாம் அஞ்சுமாறே.

"அம்பிற்கு அஞ்சோம். கூற்றுவனுடைய கோபத்திற்கு அஞ்சோம். பிறை சூடிப் பெருமானை நினைந்து நைந்து நெக்குருகி கண்கள் நீரைச் சொரிய வாழ்த்தி நின்று ஏத்தமாட்டாத ஆண்மையுடமை அல்லாதவரைக் காணநேரிடின் நாம் ஐயகோ அஞ்சுமாறே.....

*"ஆணலா தவரைக் கண்டால்*
*அம்மநாம் அஞ்சு மாறே"*

## விளக்கு ஏற்ற உகந்த எண்ணெய் வகைகள்

1. நெய் – சகல செல்வமும் பெருகும். நலனும் உண்டு. முருகன் சந்நிதியில் நெய் விளக்கு ஏற்றுவது மரபு.
2. நல்லெண்ணை – நல்லெண்ணையில் விளக்கேற்றினால் எல்லாப் பீடையும் விலகும். யமபயம் இருக்காது.
3. இலுப்பை எண்ணெய் – ஆரோக்கியம் உண்டாகும்.
4. ஆமணக்கு எண்ணெய் – சகல சம்பத்தும் உண்டாகும்.
5. ஐந்துவகை எண்ணைகள் – நெய், விளக்கெண்ணை, வேப்பெண்ணெ, இலுப்பை எண்ணை, தேங்காயெண்ணை ஆகிய ஐந்தும் விளக்கில் ஊற்றி ஒரு மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்தால் தேவியின் அருள் பூரணமாகக் கிடைக்கும்

(கடலை எண்ணெயில் விளக்கு ஏற்றக்கூடாது)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

# காதற்ற ஊசியால் பரதேசியான பட்டினத்தார்

இணுவையூர் ம்ரு. சிவலிங்கம்

மூவுலகிலும் செல்வத்தின் அதிபதியான குபேரன் ஒரு சமயம் சிவசக்தியினர் உலாவரும்போது தானும் உலாவரும் சிறப்பினால் கர்வங் கொண்டான். முக்காலத்தையும் உணர்ந்த முக்கண்ணன் குபேரனின் அகந்தையடக்க விரும்பினார். இச்சுற்றுலாவில் குபேரன் பூவுலகிலுள்ள சிவாலயங்களைக் கண்டதும் அங்கு சென்று தரிசிக்க விரும்பினான். ஈசனும் தக்க தருணம் வந்ததென எண்ணிக் குபேரனைப் பூவுலகில் பிறந்து ஆலய தரிசனம் காண ஆசீர்வதித்தார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த சிவனேசன் ஞானகலை தம்பதியினர் வணிகர் குலத்தில் தோன்றியதால் பொருட்செல்வம் மிகுந்தும் மழலைச் செல்வம் இல்லையே என வருந்தித் திருவெண்காட்டீசரை வேண்டினர். குபேரனின் வருகையும் திருவெண்காட்டீசரின் கருணையும் குபேரனுக்கு சிவனேசன் தம்பதியினரின் மகனாகப் பிறக்கும்பேறு கிடைத்தது. திருவெண்காட்டீசரின் திருவருளை வியந்து தமது தவப் புதல்வனுக்குத் திருவெண்காடர் எனத் திருநாமஞ்சூட்டி மகிழ்ந்தனர். மகனின் அழகும் அருள்பொலியும் புன்சிரிப்பும் பெற்றோரை மேலும் கவர்ந்தது. தம் பிள்ளையைச் சீராட்டி பாலூட்டி அன்புடன் அரவணைத்து இன்புறும்வேளை திருவெண்காடர் வாலிபப் பருவத்தை அடைந்தார். தந்தையுடன் உடனிருந்து வணிகத் தொழிலில் சகல நுணுக்கங்களையும் கற்று அதியுயர் சிறப்பான வணிகரானார். முன்வினைப் பயனின்படி இம்மையிலும் பெருநிதியத்தின் அதிபதியானார். காவிரிப் பூம்பட்டினத்திற் பிறந்து வணிகர் குல திலகமாக இருந்தமையால் இவரைப் பட்டினத்தார் என்று யாவரும் அன்புடன் அழைத்தனர். பட்டினத்தார் தமது திறமையால் பொருள் மிகுந்த செல்வச் சீமானாக விளங்கியதால் அவ்வூர் அரசர்கள் அவ்வப்போது வந்து பெருநிதியைக் கடனாகப் பெற்றுவந்த பெருமையும் இவருக்கு இருந்தது.

**பட்டினத்தாரின் இல்லச் சிறப்பு**

திருமணப் பருவம் வந்ததும் சிவகலை என்னும் பெண்ணை இல்லறத்தில் இணைத்து நல்லறம் பேணி வந்தார். சகல செல்வங்களும் மிகுந்தும் மழலைச் செல்வம் கிடைக்கப் பெறும் நோக்கில் சிவாலய தரிசனையை நாடிய தம்பதியருக்கு திருமறைக்காடு என்னும் திருத்தலத்தில் இறையருளாக ஒரு ஆண் மகவு கிடைத்தது. இதனால் அகமிக மகிழ்ந்த தம்பதியினர் அப்பிள்ளைக்கு மருதவாணன் எனத் திருநாமஞ்சூட்டி சீராட்டிப் பாலூட்டி அன்புடன் பேணி வளர்த்தனர். மருதவாணனும் தந்தையின் குலத்தொழிலில் ஆர்வம் காட்டி யாவற்றையும் நன்கு கற்றுத் தந்தைக்கு நிகரான சமர்த்தனாக விளங்கினான். இக்காலத்தில் வணிகத் துறையில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தபோது அயலூர் முத்து வியாபாரி ஒருவர் பட்டினத்தாரிடம் ஒரு அழகிய

முத்தைக் காண்பித்துப் பேரம் பேசினான். அந்த முத்துக்குப் பட்டினத்தார் பத்தாயிரம் பொன் என விலை நிர்ணயஞ் செய்தார். அப்போது பதினாறு வயதுச் சிறுவனாக இருந்தபோதும் தமது திறமையால் அந்த முத்தில் நீர் இருப்பதாகவும் அது திறமான ஆணி முத்து அல்ல என்றும் கூறி அதனை உடைத்து நீர் வெளிவருவதைக் காண்பித்தான்.

இதைக் கண்டதும் முத்துவியாபாரி பயந்து வேதனையுற்றதைக் கண்ட மருதவாணன் ஒரு ஓலையில் எழுதி அதனை கடாரபுரத்தில் வாழும் ஞானானந்தன் என்பவரிடம் கொடுக்குமாறு அனுப்பி வைத்தான். முத்துவியாபாரி அவ்வோலையை ஞானானந்தரிடம் தந்ததும் அவர் அந்த ஓலையைத் தன் தலைமேல் வைத்து ஆனந்தமடைந்ததுடன் பத்தாயிரம் பொன்னை வியாபாரியிடம் கொடுக்க அவனும் மகிழ்வுடன் பெற்று வெளியேறினான்.

**மருதவாணனின் கடல்கடந்த வியாபாரம்**

பதினாறு வயதுப் பருவத்தே வாணிபத்தில் சகல நுணுக்கங்களையும் கற்ற மருதவாணன் கடல் கடந்து வாணிபஞ் செய்ய விரும்பினான். பெற்றோர் மகனின் பருவ வயதை எண்ணித் தயங்கினர். மருதவாணனோ தந்தையை இசைய வைத்துக் கடல் கடந்த வாணிபத்தை மேற்கொண்டான். மருதவாணனுடன் சென்ற மற்றும் வியாபாரிகளும் முதலில் ஒரு தீவில் வியாபாரஞ் செய்ததும் புறப்பட்டு வேறிடஞ் செல்வதாகக் கூறிய போது மருதவாணன் அத்தீவிலேயே தங்கி நின்று அறப்பணி சிவப்பணியில் பொருளை விரயஞ் செய்தான். குறைந்த விலையில் எரு விறாட்டிகளையும் தவிட்டிகளையும் மூட்டைக் கணக்கில் வாங்கி வைத்திருந்தான். மீண்டும் மற்றைய வியாபாரிகள் வரும்போது தாமும் புறப்பட்டுத் தாயகம் திரும்பினான்.

மதிநுட்பமான மருதவாணன் பெறுமதி வாய்ந்த பொருட்களுடனே வருவதாக அறிந்த பட்டினத்தார் தமது பெருநிதி மேலும் பெருகும் என்ற ஆவலுடன் மகனை அழைத்து வரத் துறைமுகஞ் சென்றார். மகனால் தருவிக்கப்பட்ட பொருட்கள் பெறுமதியற்றவையெனக் கண்டதும் மகன் மீது சினங்கொண்டார். மருதவாணனோ யாதும் அறியாதவர்போல விட்டகன்று இல்லமேகினான்.

**பட்டினத்தார் பரதேசியானார்**

ஒரு காதற்ற ஊசியும் ஒரு சிறிய ஓலைச்சுவடியும் கொண்ட சிறிய பெட்டியைத் தந்தையிடம் கொடுக்குமாறு தாயிடம் தந்ததும் மருதவாணன் மறைந்தருளினான். சினத்தால் மனம் தடுமாறிய பட்டினத்தார் ஒரு விறாட்டியை எடுத்து வீசி எறிந்தார். அது விழுந்ததும் உடைந்து பொன்னும் வைரமும் நவமணிகளும் சிதறிப் பிரகாசித்தன. பட்டினத்தாரின் மனம் உவகையால் பொருமியது. தன் மகன் மீது தான்காட்டிய சினத்துக்காக அவனை உடன் கண்டு இன்ப நிலையைப் பகிர மகனைத் தேடியும் காணாததால் தமதில்லமேகினார். அங்கும் மகன் இல்லை. பட்டினத்தாரின் மனைவி ஒரு பெட்டியைக் கொடுத்து மகன் தந்ததும் வெளியே போனதாகவும் கூறினாள்.

பட்டினத்தார் ஆவலுடன் பெட்டியைத் திறந்தபோது காதற்ற ஊசியும் ஒரு சிறு ஓலையும் இருந்தன. உடனே பட்டினத்தார்

அவ்வோலையை ஆவலுடன் எடுத்து வாசித்தார். "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்றிருந்தது. காதற்ற ஊசியும் அவ்வாசகமும் பட்டினத் தாரைப் பரதேசியாக்கியது. சித்தத்தைச் சிவன்பால் நிறுத்தினார். சித்து மகிமை கொண்ட துறவியானார். தமது பிரதான கணக்கப் பிள்ளையை அழைத்துத் தமது சகல சொத்துக்களையும் யாவரும் வேண்டியது போல எடுக்கட்டும் என்றார். தமது தாயா ரையும் தாரத்தையும் மூத்த சகோதரியையும் கண்டு தன் இல்வாழ்வை விட்டு துறவியாகச் செல்வதாகவும் கூறினார். இதைக் கேட்டதும் தாயார் மகனே எனது இறுதிக் கிரியை களைச் செய்தபின் செல்லலாமே எனக் கேட்டார். அப்போது பட்டினத்தார் என் தாயாரின் இறுதிக் கிரியைகளை நிறை வேற்றிய பின்பே இவ்வூரை விட்டுச் செல்வேன் என்று கூறினார்.

**முற்றும் துறந்து வெளியேறியது**

மேலாடை தானாகவே நழுவியது. வீட்டையும் சகலவற்றையும் துறந்து இடுப்பில் ஒரு நாலுமுழ வேட்டியுடன் புறப்பட்டு ஊர்ப்பொது மடத்தை அடைந்து தியானத்தில் இருந்தார். தனக்கு மகனாக வந்து ஞான அறிவைத் தந்த மருத வாணன் மகேசனே என உணர்ந்தார். இறையின்பம் மேலோங்கியது. ஊரவர் களும் ஏனையோரும் இவரைக் கண்டதும் அவரின் செயலை உணர்ந்து இவர் பெற்ற இறையருள் எமக்குக் கிடைப்பதெப்போது என ஏங்கினர். உற்றார், நண்பர்கள் பட்டினத்தாரை நோக்கி செல்வச் சிறப்புடன் வாழ்ந்து இப்போது துறவியாய் மாறிய தால் யார் ஆதரவு தருவார்கள் எனக் கேட்டனர். அப்போது பட்டினத்தார் சிரித்தார். இறைவனின் திருவடியைத் தியானித்த வண்ணம் யாருக்கு யார் ஆதரவு? எதுவரை ஆதரவு வரும்? ஆதரவாக யார் வருவார்கள் என்று கூறிவிட்டு,

**"அந்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழியம்பொழுக**
**மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு**
**கைத்தலம் மேல் வைத்து அழும் மைந்தரும் சுடுகாடுமட்டே**
**பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே?**

என்று பாடினார். இதைக் கேட்டதும் யாவரும் பட்டினத்தாரின் உள்ளத்துறவை வியந்தனர்.

பட்டினத்தார் பரதேசியானதை அறிந்த மன்னன் பட்டினத்தாரின் சொத்துக்களைப் பொதுமக்கள் சூறையிடாது தடுத்துத் தன தாக்கினான். சொத்துக்களுக்கு உடந்தை யாக இருந்த சேந்தனாரின் சொத்துக்களை அபகரித்து அவரைக் கைது செய்து சிறையிலிட்டான். சேந்தனாரின் மனைவி பயந்து தமது சிறு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு அயலூருக்குச் சென்று கூலி வேலை செய்து சீவித்தாள்.

**அரசனும் ஆண்டியும்**

அரசன் நேரடியாகப் பட்டினத்தார் இருந்த இடத்துக்குச் சென்று "வணிக குல திலகமே போதிய நிதியையும் செய் தொழிலையும் விட்டு இத்துறவுக் கோலத்தில் என்ன சிறப்பைக் கண்டீர்" இது கேட்டதும் "மன்னா அரசனான நீ நின்று கேட்கும் கேள்விக்கு ஆண்டியான நானோ இருந்து கொண்டே பதில் கூறுகிறேன் என்றதும் மன்னன் வெட்கித் தலைகுனிந்த வண்ணம் அவ்விடம் விட்டகன்றான்.

**தம்பிக்கு நஞ்சு கலந்து பிச்சையிட்ட சகோதரி**

துறவியான பட்டினத்தார் பசிவந்தபோது ஊருக்குட் சென்று இரு கைகளையும் நீட்டிப்

பிச்சை ஏற்று உண்பதும் தெருவோரங்களில் இரவு வேளை உறங்குவதும் இறைவனையே தஞ்சமென எண்ணித் தியானித்தும் வந்தார். இவ்வாறு பட்டினத்தார் வீதிவழி சென்று பிச்சை எடுப்பதால் தமக்கு அவமரியாதை ஏற்படுவதாக எண்ணிய மூத்த சகோதரி பட்டினத்தாருக்கு நஞ்சு கலந்த அப்பத்தைப் பிச்சையாக வழங்கினார். முக்காலத்தையும் உணர்ந்த பட்டினத்தார் சகோதரியின் கபடத்தை அறிந்து சிரித்தார். கையிலிருந்து அப்பத்தை நோக்கினார். "தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்று அவ்வப்பத்தைக் கூரை மீது எறிந்தார். வீடு தீப்பற்றி எரிந்தது. அத்தீயை யாவராலும் அணைக்க முடியவில்லை. பட்டினத்தாரின் காலில் வந்து விழுந்து மன்னிப்புக் கோரினார். வீட்டுக்கு எதுவித சேதமுமின்றித் தீயணைந்தது.

## தாயாருக்கு இறுதிக் கிரியைகள் புரிந்தமை

வழமைபோல திருவெண்காட்டில் பட்டினத்தார் ஆலய தரிசனஞ் செய்தபின் தியானத்திலிருந்தார். அச்சமயம் தாயாரின் சிவப்பேறு தென்பட்டது. "குடியிருந்த கோயிலுக்கு கொள்ளி வைப்போம்" என்று கூறியவாறு காவிரிப்பூம்பட்டினஞ் சென்றார். உறவினர்கள் தாயாரின் பூதவுடலுக்கு தகனக் கிரியைகள் செய்வதற்காக மயானத்தில் கூடியிருந்தார். பட்டினத்தார் அழுது புலம்பிப் பாடிய வண்ணம் அவ்விடம் வந்ததைக் கண்ட யாவரும் மிரண்டு ஒதுங்கினர். உறவினர்களால் அடுக்கப்பட்ட சிதையை அகற்றி விட்டு பச்சையான வாழை மட்டையால் சிதையமைத்து அதன் மீது தாயாரின் புனித உடலை வைத்து வேண்டிய கிரியைகளை மேற்கொண்டார். தாயாரின் பெருமைகளை எண்ணினார். தான் துறவு பூண்ட போது தாயாரின் இறுதிக் கிரியைகளைச் செய்வதாகக் கூறிய வாக்கை நிறைவு செய்தார். தான் பத்து மாதம் குடியிருந்த கோயிலுக்குக் கொள்ளி வைப்போம் என்று கூறினார். ஒரு தாய் ஒரு குழந்தைக்காக பத்து மாதம் நொந்து சுமந்து பல வேதனைகளுடன் பெற்று வளர்த்து நோய் காத்து ஆளாக்கிய பெருமைகளைப் பல பாடல்களாகவே பாடினார். அப்பாடல்களி லொன்றான

**"முன்னை இட்ட தீ முப்புரத்திலே**
**பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்**
**அன்னையிட்ட தீ அடி வயிற்றிலே**
**யானும் இட்ட தீ மூள்க மூள்கவே"**

எனப் பாடியதும் யாரும் தீயிடாமல் சிதை தானாகவே தீப்பற்றி எரிந்தது. தாயாரின் இறுதிக் கிரியைகளை நிறைவு செய்ததும் பட்டினத்தார் திருவிடை மருதூர் சென்று ஈசனை வழிபட்டார். ஓர் நள்ளிரவில் பட்டினத்தாரின் கனவிற் தோன்றிய ஈசன் சிவாலயமெல்லாஞ் சென்று பாடுமாறு பணித்தார். இவ்வாறு பல்லாயிரம் பாடல்களைப் பாடிய வண்ணம் சிவாலய தரிசனத்துடன் பல அற்புதங்களையும் செய்தார்.

## இறந்த சீடனை உயிர்பெறச் செய்தமை

தொடர்ந்தும் பட்டினத்தார் திருவாரூரில் தரிசித்துவிட்டுத் தங்கியபோது குருபக்தி நிறைந்த சிறுவனொருவர் பட்டினத்தாருக்குப் பணிவிடை செய்து சீடனாக வெகுநாட்கள் பணி செய்தான். ஒரு சமயம் அவனின் தாயாரின் வேண்டுதலினால் குருவின் ஆசியுடன் இல்லத்தில் இணைந்தான். சில நாட்களில் ஒரு இரவு வேளை அவன் இறந்துவிட்டான். ஊர் கூடி இறந்தவனின் மீது வருத்தம் தெரிவித்தபோது

பட்டினத்தாரும் அவ்விடம்வந்தார். இறந்த வனின் உடலைப் பட்டினத்தார் வருடிய வண்ணம் ஒரு பாடலைப்பாடினார்.

**“வடிவந்தானும் வாலிபம் மகளும் தாயும் மாமியும்**
**படிகொண்டாரும் ஊரிலே பழிகொண்டாய் நீதியோ**
**குடிவந்தானும் ஏழையோ? குயவன்தானும் கூழையோ?**
**நடு நின்றானும் வீணனோ? நகரம் குறை ஆனதே**
**மண்ணும் உருகும் மரம் உருகும் மாயை உருகும்**
**மால் உருகும் பெண்ணும் உருகும்**
**ஆண் உருகும்பேதாபேத வகை உருகும்**
**அண்ணல் உருகும் இடத்தமர்ந்த ஆத்தாள் உருகும்**
**அரவணையான்**
**எண்ணி உருகும் குருநாதன் என்பால் உழைத்த ஓர்**
**மொழியே”**

எனப் பாடி முடித்ததும் அந்த வாலிபன் உயிர்த்தெழுந்தான். தேவர்கள் பூமழை பொழிந்தனர். தேவ வாத்தியங்கள் ஒலித்தன. உயிர்த்தெழுந்த வாலிபன் ஏதும் அறிந்திலன். பட்டினத்தாரை வணங்கி வரவேற்று உபசரித்தான். பட்டினத்தார் சிவாலய தரிசனத்துக்காகப் புறப்பட்டார்.

## வீடு தோறும் பிச்சை எடுத்தபோது ஏற்பட்ட துன்பம்

சிவாலய தரிசனத்தின்போது பட்டி னத்தார் வீடுகளில் பிச்சை எடுப்பார். ஒருநாள் ஒரு வீட்டின் முன் பிச்சைக்காக நின்றார். அவ்வீட்டுக்காரன் பட்டினத்தாரைத் தடியால் அடிக்கவும் அவர் ஏதும் பேசா திருந்தார்.இதைக் கண்ட அயல் வீட்டுக் காரன் ஓடிவந்து பட்டினத்தாரை அழைத்துச் சென்று அன்னமிட்டான்.

ஒரு சாண் வயிற்றைக் காக்க ஏற்படும் துன்பம் பெரிதானதால் இனிமேல் எவ்விட முஞ் செல்லாது ஓரிடத்திலிருந்து யாரும் அன்புடன் தந்தால் உண்பது எனத் தீர்மா னித்துப் பின்வரும் பாடலைப் பாடினார்.

**“இருக்கும் இடம்தேடி என்பசிக்கே அன்னம்**
**உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன் – வெருக்க**
**அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்**
**இளைத்தாலும் போகேன் இனி”**

உணவுக்காக எவரிடத்திலும் போய்க் கையேந்துவதில்லை என்ற நியதி கொண்ட பட்டினத்தார் இறைவனின் சித்தப்படி ஆலய தரிசனங்களிற் தன்னை இணைத்துக் கொண்டார். திருவெண்காட்டை அடைந்தார். ஆலய தரிசனை முடித்து வெளியே வந்தமர்ந்தார். பட்டினத்தார் அவ்விடம் வந்ததை அறிந்த சேந்தனாரின் மனைவி தன் மகனையும் அழைத்துக் கொண்டு வந்து பட்டினத்தாரை வணங்கித் தம்மை அறிமுகஞ் செய்தனர். “சுவாமி உங்கள் பணிப்பின் பேரில் என் கணவர் உங்கள் சொத்தினை யாவரும் கவர்ந்து செல்ல உதவியதால் அரசன் என் கணவரைக் கைது செய்து சிறையிலிட்டுள்ளான். அவரை நீங்களே சிறைமீட்டுத் தந்து வாழ்வளிக்க வேண்டும்” என விண்ணப்பித்தாள்.

பட்டினத்தார் அவர்களை வாருங்கள் என்று அழைத்துச் சென்று ஈசனின் முன்னின்று,

**“மத்தளைதயிருண்டானும் மலர்மிசை மண்ணினாலும்**
**நித்தமும் தேடிக்காணா நிமலனே நீவின்றேகிச்**
**செய்த்தளை கயல்பாய நாங்கூர் சேந்தனை வேந்தனிட்ட**
**கைத்தளை நீக்கி என்முன் காட்டு வெண்காட்டுளானே”**

என்று பாடினார். பட்டினத்தாரின் வேண்டுதலை ஏற்ற இறைவன் பிள்ளை யாரை அழைத்து “அரசனிட்ட சிறையி லிருந்து அன்பர் சேந்தனை விடுதலை செய்” என்றார். பிள்ளையார் யானையின் வடிவத்திற் சென்று சிறைக் கதவைத் தகர்த்துச் சேந்தனாரைப் பட்டினத்தாரின் முன்னிலையில் விட்டார்.

ஒரு நொடியில் நடந்தவை ஏதுமறியாத சேந்தனார் தன்முன் நின்ற பட்டினத்தாரை வணங்கிக் "குருநாதா அரசனிட்ட சிறையிலிருந்து விடுவித்ததுபோல எனது பிறவிப் பெருங்கடலிலிருந்தும் விடுதலை செய்யவேண்டும்" என்றார். சேந்தனாரின் பக்குவநிலையை உணர்ந்த பட்டினத்தார் "சேந்தா குடும்பத்தாருடன் தில்லைக்குச் சென்று காட்டில் விறகு வெட்டிச் சேகரித்து விற்று உன் சீவியத்தை மேற்கொள். ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு சிவனடியாருக்கு உணவளித்து வா நீ நினைத்தது நடக்கும்" என்றார். பட்டினத்தாரின் குருமொழி கேட்ட சேந்தனார் சிறப்பான அறப்பணியாற்றிப் பிற்காலத்தில் பல அற்புதங்களை நிலைநாட்டி உயர்ந்தார்.

**கழுமரம் தீப்பற்றி எரிதல்**

பட்டினத்தாரின் தரிசனை உலாவில் உஜ்ஜனியில் குடிகொண்டிருந்த காலேஸ்வரரைத் தரிசனை முடிந்ததும் அயற்காட்டிலுள்ள விநாயகராலயத்தில் இருள் நேரமாகியும் தியானத்தில் இருந்தார். அப்பாதையால் வந்த திருடர் கூட்டம் விநாயகரை வணங்கிவிட்டு பத்திரகிரியார் மன்னனின் அரண்மனையில் பெருந் தொகையான தங்க வைர நகைகளைக் களவாடிய பின் பிள்ளையார் ஆலயத்தில் வணங்கும் போது தட்சிணையாக ஒரு விலையுயர்ந்த மாலையைப் பிள்ளையார் மீது வீசினர். அந்த மாலை பட்டினத்தாரின் கழுத்தில் விழுந்தது. திருடர்கள் சென்று விட்டனர்.

பொழுது புலர்ந்ததும் அரச அரண்மனையில் ஏற்பட்ட திருட்டினைக் கண்டு பிடிக்கப் புறப்பட்ட காவலர்கள் காட்டுப் பக்கமிருந்த விநாயகராலயத்தில் தியானத்திலிருந்த பட்டினத்தாரின் கழுத்திலிருந்த மாலையைக் கண்டதும் அவரைத் திருடனெனக் கருதி அரசன் முன் நிறுத்தினர். அரசன் அவரைக் கழுவில் ஏற்ற உத்தரவிட்டான். காவலர்கள் கழுமரத்திற்கு இழுத்துச் சென்றனர். கழுமரத்தை அண்மியதும் பட்டினத்தார் சிரித்தார். கழுமரத்தை நிமிர்ந்து பார்த்து

**"என் செயலாவது யாதொன்றும் இல்லை; இனித்தெய்வமே**
**உன் செயலே என்று உணரப் பெற்றேன்; இந்த ஊனெடுத்த**
**பின் செய்ததீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு**
**முன் செய்த தீவினையோ இங்ஙனமே வந்து மூண்டதுவே"**

என்று பாடியதும் கழுமரம் தீப்பற்றியெரியத் தொடங்கியது. காவலர்கள் மன்னனிடம்முறையிட்டனர். அரசன் அவ்விடம் வந்ததும் பட்டினத்தாரை வணங்கி மன்னிக்குமாறும் தான் கடைத்தேற அருளுமாறும் பணிந்தான். பட்டினத்தார் அரசனை நோக்கி மன்னா வருந்தாதே உன்னால் எனக்கேதும் தீங்கில்லை என்று கூறி அவர் மீது அருட்பார்வையால் நோக்கி அரசனை இறைவனை உணர வைத்தார். பாடிய பாடல் இதுவாகும்.

**அஞ்சக் கரமென்னும் கோடாலி கொண்டிருந்த ஐம்புலனாம்**
**வஞ்சப் புலக்கட்டைவேர் அறவெட்டி வளங்கள் செய்து**
**அஞ்சத் திருச்சிச்சதாசிவம் என்கின்ற வித்தையிட்டுப்**
**புஞ்சக் களை பறித்தேன் வளர்த்தேன் சிவ போகத்தையே"**

இப்பாடலைக் கேட்டதும் மன்னனுக்கு ஞானத் தெளிவு பிறந்தது. தமது ஆடை அணிகளை மட்டுமன்றி யாவற்றையம் துறந்து பட்டினத்தாரின் சீடனாகிப் பட்டினத்தாருடன் உடன் சென்று சிவயோக போகத்தை ஏற்றார்.

**முத்திப்பேறு**

பட்டினத்தாரின் ஆலய தரிசன உலாவில் திருவிடை மருதூர் சிவத்தலம் சிறப்பானது. அத்தலத்தில் பற்றற்ற துறவிக்கு இப்பூத

உடலும் பாரமாகும். அச்சுமையை நீக்கி முத்தி தருமாறு வேண்டினார். பட்டினத் தாரின் முன்பாக வயோதிபர் வடிவில் வந்த இறைவன் ஒரு பேய்க்கரும்பைத் தந்து இதன் நுனிக்கரும்பு எப்போது இனிக்கிறதோ அத்தலமே உனது முத்தித் தலமாகும் என்றார். இறைவன் ஆணைப்படி பல தலங்களைத் தரிசிக்கும்போதும் கையிலிருந்த கரும்பைச் சுவைத்த படியே சென்றார். இறுதியாகப் பட்டினத்தார் திருவொற்றியூர் திருத்தலத்துக்கு வந்த போது கரும்பின் சுவை இனித்து மகிழ்ந் தார். இறைவனடி சேர நேரம் கிட்டியதென மனம் நெகிழ்ந்தார், கடலோரஞ் சென்றார்.

கடற்கரையில் விளையாடிக் கொண்டி ருந்த சிறுவர்களை அழைத்தார். கூடி விளையாடினார். சலவைத் தொழிலாளி யின் பெரிய சால் ஒன்றை எடுத்து அதனால் தன்னை மூடச் செய்தார். சிறுவர்கள் மூடிய சிறிது நேரத்தில் தனது சித்து மகிமையால் வேறோரிடத்தில் காட்சி தருவார். இவ்வாறு பல தடவைகள் சாலினால் மூட வைத்துச் சித்து விளை யாடல்களைச் செய்து யாவரையும் வியக்க வைத்தார். கடைசியாக மூடிய பின் வெகு நேரமாகியும் பட்டினத்தார் வெளியே வரவில்லை. யாவரும் அவ்விடஞ் சென்று சாலைத் திறந்தபோது பட்டினத்தார் சிவலிங்க ரூபமாகக் காட்சி தந்தார்.

ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட இச் செய்திக்குச் சான்றாக சிவலிங்கம் தோன்றிய இடத்தில் பட்டினத்துச் சுவாமி கோயில் என்னும் பெயரோடு ஒரு சிவாலயம் திருவொற்றியூரில் அமைந் துள்ளது. இன்றும் பலராலும் போற்றி வணங்கப்பெறும் இவ்வாலயம் சிறிய தோற்றத்திற் காணப்பட்டாலும் பல அற்புதமான தத்துவங்களை உணர்த்து கின்றது.

ஆலய முகப்பில் நந்தியும் கருவறை யும் சிவலிங்கமாக மாறிய பட்டினத்தடி களின் லிங்கமூர்த்தியும் காட்சி தரு கின்றன. மேலும் அகந்தையுடன் இருந்த குபேரனான நண்பனை பூவுலகில் பிறக்க வைத்த இறைவன் அவனது மகனாகவே தோன்றி நிலையற்ற செல்வத்தினை அனுபவிக்கவொட்டாது செல்வங்கள் யாவும் நிலையற்றவை என்பதை உணர வைத்து இறுதியில் தன்னுடன் இணைத்தப் பேரின்பத்தை நுகர வைத்தார்.

சிறிய வீடு போலக் காட்சி தரும் பட்டினத்துச் சுவாமிகளின் ஆலயம் வீடு பேறடையச் செய்யும் வகையில் பல தத்துவங்களுடன் அமைந்தமை திரு வருளின் சிறப்பாகும்.

சித்தர்களின் வாழ்வின் முடிவில் சிவலிங்கமாக மாறிய பெருமைக்குரிய பட்டினத்தடிகளின் பாடல்கள் பல தத்தவக் கருத்துக்களையும் இறை சிந்தனை யையும் பல அற்புதங்களும் எமக்கு உணர்த்துகின்றன. சைவ சமய தத்து வங்களையும் பெருமைகளையும் பல சித்திகளையும் உணர வைக்கும் பட்டி னத்தாரின் வரலாறு எம்மரிய சைவ மக்களுக்குப் பெரிய வழிகாட்டியாக அமைந்தமை இறையருளேயாகும்.

# ஆடி அமாவாசை

## கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

விரதம் என்பது தவம். தவத்திற்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர், உற்ற நோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை ஆகியவையே தவத்திற்கு வடிவமாகும் என்றார். தனக்கு வருகின்ற துன்பங்களை பொறுத்துக் கொள்வதாலும், பிற உயிர்களுக்கு துன்பங்களைச் செய்யாதிருத்தலாலும் ஒருவர்க்கு அளப்பரிய ஆற்றல் கிடைக்கின்றது. இத்தகைய ஆற்றல் நிறையப் பெற்ற வர்க்கு கூற்றம் குதித்தலும் கைகூடும் என்கிறது பொய்யாமொழி. விரதம் மேற்கொள்வதன் மூலம் விரும்பிய பயன்களை விரும்பியவாறே பெற்றக் கொள்ளமுடியுமாகையில், யாவராலும் விரதம் நோற்கப்படவேண்டியதாக உள்ளது. விரதத்தில், வழிபாடு செய்தல் ஒரு முக்கிய அம்சமாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்போர் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கு முரியவர்கள். விரதம் என்பது பிரதிக்ஞையும் ஆகும். விரத காலங்களில் விதிக்கப்பட்டதைச் செய்வதும், விலக்கப்பட்டதை செய்யாதிருத்த லும் என்பது தீர்மானமாக உள்ளது. எமது சமயத்திலும் பல விரதங்கள் விதித்துரைக்கப்பட்டுள்ளன. விநாயகர், சிவன், சக்தி, முருகன், விஷ்ணு முதலிய தெய்வங் களைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதங்களென்றும்; தெய்வங்களாகிவிட்ட தந்தை, தாய் ஆகியோரை எண்ணி மேற்கொள்ளப்படும் விரதங்கள் என்றும் அவை பல வகைப்படும்.

அமாவாசை, பௌர்ணமி ஆகிய இரண்டு விரதங்களும் முறையே, காலமான தந்தை, தாய் ஆகியோரைக் குறித்து, அவர்கள் நற்கதியடைய, அவர்களின் பிள்ளைகளால் அநுட்டிக்கப்படும் விரதங்கள் ஆகும். ஒவ்வொரு மாதத்திலும் இவ்விரதங்களுக்குரிய தினங்கள் வருகின்றன. இவ்விரதங்களை அனுட்டிப்பவர்கள் ஆசாரசீலர்களாக, உபவாசம் இருந்தும், அவ்வாறு இருக்க இயலாதவர் ஒரு பொழுது உண்டும் அனுட்டிப்பர். இத்தினத்தில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி தூய்மையராய், பிதிர் தரப்பணம் செய்தும்; பிண்டதானம், சிரார்த்தம் செய்தும்; இறைவனை வழிபட்டும்; அந்தணர்களுக்குத் தானமும், விருந்தினர், சுற்றத்தவர், ஏழைகள், ஆதரவற்றோர் ஆகியோருக்கு உணவும் அளித்தும்; அவர்களுடன் போசனம் செய்தும் விரதக் கொள்கை, தீர்மானங்களுடன் இருப்பர். இறந்த தந்தை தாயாரின் பாவ வினைகளை நீக்குதற் பொருட்டும், அவர்கள் முத்தியின்பத்தை அடைதற் பொருட்டும் அமாவாசை, பௌர்ணிமை நாட்களில் விரதங்களைப் பிள்ளைகள் அனுட்டிக்கின்றனர். அமாவாசை, பௌர்ணிமைத் தினங்கள் மாதந்தோறும் வருகின்றன. அவற்றைத் தவறாது அனுட்டிக்க வேண்டியது தந்தை, தாயார்களை இழந்த பிள்ளைகளின் கடமையாகும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமியும், ஆடி, தை மாதங்களில் வருகின்ற அமாவாசையும் சிறப்புப் பொருந்தியன என்று சைவ நூல்கள் கூறுகின்றன. அவரவர் தந்தை, தாயார் இறந்த திதிகளைத் தவற விட்டவர்கள், ஆடி அமாவாசைத் தினத்தில் தந்தையை நோக்கியும், சித்திரைப் பௌர்ணமித்தினத்தில் தாயின் பொருட்டும் சிரார்த்தம், தருப்பணம், பிண்டதானம் என்பவற்றைச் செய்யும் வழக்கம் உள்ளது.

இனி ஆடி அமாவாசை விசேடத்துவம் பற்றி நோக்குவோம். இந்துக்கள் ஒரு வடத்தை இரண்டு அயனங்களாகப் பிரித்துள்ளனர். தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையும் உள்ள ஆறு மாதங்கள் உத்தராயன காலம் என்பர். புவியின் தெற்கு அகலக்கோடு 23 1/2 பாகையிலிருந்து அதாவத மகரக்கோட்டி லிருந்து வடக்கு நோக்கி சூரியன் சஞ்ச ரிக்கும் காலம் இதுவாகும். கோடை காலப் பகுதியும் இதுவாகும். உத்தராயனம் தேவர்களுக்குப் பகற்காலம் ஆகும். ஆடி மாதம் தொடக்கம் மார்கழி வரையுள்ள ஆறு மாதங்கள் தட்சணாயன காலம் என்பர். புவியின் வடக்கு அகலக்கோடு 23 1/2 பாகையிலிருந்து அதாவது கடகக்கோட்டி லிருந்து தெற்கு நோக்கி சூரியன் சஞ்சாரம் செய்யும் காலம் இதுவாகும். கார்காலம் தொடங்கி நடைபெறும் காலப்பகுதியுமாகும். தேவர்களுக்குத் தட்சணாயனம் இரவுக் காலம் என்பர்.

தட்சணாயனத் தொடக்க மாதம் ஆடி என்பதால், பிதுர் காரியங்களுக்கு ஆடி மாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படு கிறது. ஆடி மாதத்தில் வருகின்ற அமா வாசைத் திதி பிதுர் வழிபாட்டிற்குப் புண்ணியமான தினம் எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

வாரம், திதி, கரணம், நட்சத்திரம், யோகம் என்னும் ஐந்தும் பஞ்சாங்க உறுப்புக்கள் ஆகும். இவற்றில் திதி முப்பது என்பர். திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்தைக் குறிப்பிடும் சொல், பூர்வபக்கப் பிரதமை தொடக்கம் அபரபக்க அமாவாசை ஈறாக உள்ள 30 காலப் பகுப்புக்கள் ஆகும். பூர்வபக்கம் என்பது அமாவாசையின் அடுத்த தினத்திலிருந்து பூரணை வரையுமுள்ள 15 நாட்கள். இக்காலத்தை வளர்பிறைக்காலம் என்றும் சுக்ல பட்சம் என்றும் குறிப்பிடுவர். பூரணையின் அடுத்த தினத்திலிருந்து அமாவாசை வரையுள்ள 15 நாட்கள் அபரபக்கம் ஆகும். இதனைத் தொடர்ந்து தேய்பிறைக் காலம் என்றும் கிருஷ்ண பட்சம் என்றும் கூறுவர்.

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும் பொழுது ஏற்படுவது அமாவாசைத் திதி. அன்றைய தினம் பூமி யிலுள்ளவர்களுக்குச் சந்திரன் தென்படாது. சூரியனும் சந்திரனும் ஒரு இராசியில் நிற்கும் காலம் என்று சோதிட நூல் கூறும். "அமா" என்றால் ஓரிடத்தில் பொருந்தியது அல்லது சேர்ந்தது என்று பொருள்கொள்வர். 'வாசி' என்றால் சாதகமான அல்லது வாய்ப்பான என்னும் கருத்தில் வருகின்றது. எனவே ஓர் இராசியில் சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்து அல்லது பொருந்தி உற வாகும் வாசியான நாள் அமாவாசி எனப் பட்டது. மாதத்தில் ஒருமுறை இந்நிலை உண்டாகின்றது. அதாவது மாதமொரு தடவை அமாவாசை நாள் வருகின்றது.

சூரியனின் ஒளியும் வெப்பமுமே சகல சீவராசிகளுக்கும் உயிர்ப்பையும் பல்வேறு ஆற்றல்களையும் அளித்து வாழ்விக்கின்றன. மனிதப் பிறவிகளும் சூரியனிலிருந்துதான் சகல ஆற்றல்கள், வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்கின்றன. சந்திரன் மனிதர்களின் மனத்திற்கு அதிபதி யாக நின்று ஆட்சி செலுத்துகின்றது. மனங் களில் ஏற்படுகின்ற பல்வேறு உணர்ச்சிகள், மற்றும் தெளிந்த அறிவு, உற்சாகம் என்பன சந்திரனின் செல்வாக்கிற்குட்பட்டவை ஆகின்றன. இந்நிலையில் சூரியனும் சந்திர னும் மக்கள் மீது எத்துணை பாதிப்பினை ஏற்படுத்துகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். சூரியனும், சந்திரனும் நமக்கு

பிரத்தியட்சமாகத் தோன்றுகின்ற தெய்வங்கள் என இந்துசமயம் கூறுகின்றமை நோக்கற்பாலது.

இத்துணை சிறப்பு வாய்ந்த சூரிய சந்திரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசி யில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசை யாகும். அத்துடன் தேவர்களும் அமாவாசை யின் அதிபர்களாக உள்ளனர். பூமியிலுள்ளவர்களைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு அமாவாசையும் பிதுர் கருமத்திற்கு அதாவது தென்புலத்தார் வழிபாட்டிற்கு மிக உவந்த நாள். சூரிய மண்டலத்திற்கு அப்பால் தென் மண்டலத்தில் பிதுர்கள் உறையும் பிதுர்லோகம் உள்ளது. பிதுர்களைத் தென்புலத்தார் என்று அழைப்பது தமிழர் மரபு. தென்புலத்தார் வழிபாடு, எள்ளும் தண்ணீரும் இறைத்தல், பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. அமாவாசையில் விரதம் இருந்து இக்கருமங்களை ஆற்றவேண்டும். ஆடி அமாவாசை பிதுர் கருமங்களுக்கு மிகவும் உவந்தது என்றும் பிதுர் வழிபாடு செய்யவேண்டியவர்கள் தவறாது ஆடி அமாவாசையில் செய்யவேண்டும் என்றும் நூல்கள் எடுத்துரைக்கின்றன. பிதுர் தருப்பணத்திற்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் கொள்கை.

ஆடி அமாவாசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழவினைகள் அறும் என்றும் பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைந்து முன்னோர்களான பிதுர்களை எண்ணி அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும்படி இறைவனை வேண்டி தீர்த்தமாடுதல் வேண்டும். அமாவாசை, பௌர்ணமி தினங்களில் கடல் பொங்கி எழும் நிலை உண்டு. இவ்வாறே இத்தினங்களில் மனித மன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகிறது. மானிடரின் ஆத்மீக வலுவும் குன்றும் காலமாக இத்தினங்கள் உள்ளன. எனவே தான் அமாவாசை போன்ற கனத்த நாட்கள் மிக அவதானமாகக் கழிக்கப்படவேண்டும் என்றும், இந்நாட்களில் வேறு காரியங்களைச் செய்யாதும், மனங்களைப் புலன்கள் வழிச் செல்லவிடாதும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறி வைத்தனர். இத்தினங்களில் கடவுள் வழிபாடு, பிதுர் வழிபாடு என்பவற்றைச் செய்து நல்ல பயனைப் பெறுவதே முறையாகும்.

ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல்; பிதுர்வழிபாடு செய்தல்; தருப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டுதோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும்; மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு, வேறும் பல சிவஸ்தலங்களிலும் இந்நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன. நாங்கள் நோயின்றிச் சுகமாக வாழவும், சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும் தெய்வங்களை ஆராதிக்கிறோம். இதற்குப் பிதுர்களையும் திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும். இவற்றிற்குரிய விதிமுறைகளையெல்லாம் நமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர். பராசரர், மனு, லிகிதர், சாதாதபர் போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் யாவும் சேர்த்து "தர்ம சாஸ்திர நிபந்தனம்" எனும் கிரந்தநூல் தொகுக்கப்பட்டுள்ளது. அதனை ஆதாரமாகக் கொண்டே இந்துக்களின் கர்மானுஷ்டானங்கள் நடக்கின்றன. ஆடி அமாவாசையில் இறந்த பெற்றோர்களுக்குச் செய்யும் தர்ப்பணம், சிரார்த்தம் மூலம் காணிக்கையை, அன்பினை அவர்களுக்குச்

செலுத்துகிறோம். அவர்களின் ஆசீர்வாதங்களும், பாதுகாப்பும் நமது நல்வாழ்விற்குத் தேவை. எமது சமயத்தின் விதிமுறைப்படி தெய்வத்தை நேராக வழிபட்டு அநுக்கிரகம் பெறும் நிலை மிக உயர்ந்த நிலையில் பக்குவமடைந்த சந்நியாசிகள் போன்றோருக்கே உரித்தானது. ஏனையோர் தேவதைகளைப் பிரீதி செய்து தெய்வங்களின் அநுக்கிரகம் பெற்று நன்மையடையவேண்டும். தேவதைகளைப் பிரீதி செய்வது யாகங்கள், வேள்விகள், ஹோமங்கள் மூலம் ஆகும். இவ்வாறே பிதுர்களைப் பிரீதி செய்ய சிரார்த்தம், தர்ப்பணம், பிண்டதானம் என்பவை செய்யப்படுகின்றன. இவற்றின் மூலமே நாம் நன்மையடைய வேண்டும். எனவே, அமாவாசை, பௌர்ணமி விரதங்கள் மற்றும் சிரார்த்தம் முதலியவற்றைத் தவறாது அனுட்டித்து வரவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு இவற்றை அனுட்டிக்காதவர்களுக்கு பிதுர் சாபம் ஏற்படுகிறது என்றும், பிதுர்சாபம் வாழ்வில் இன்னல்களையும் தொல்லைகளையும் தருகின்றன என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

மனிதர்கள் தம் வாழ்நாட்களில் குற்றங்களைத் தெரிந்தும் செய்கின்றனர்; தெரியாமலும் செய்கின்றனர். குற்றங்கள் எனத் தெரிந்து கொண்டு செய்யப்படுபவை புத்தி பூர்வமாகச் செய்யப்படுபவை. இவற்றை அனுபவித்தே ஆகவேண்டும். தெரியாமல் செய்யப்படும் குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டு. அபுத்தி பூர்வமாக செய்யப்பட்ட இத்தகையன, இறந்த பின் இவர்களுக்குச் செய்யப்படுகின்ற தகனக்கிரியை, அந்தியேட்டி, சபிண்டீகரணம், மாசிகம், சிராா்த்தம், மற்றும் அமாவாசை, பூரணை விரதங்கள் ஆகியவற்றின் மூலம் அகற்றப்பட்டு விடுகின்றன. குறிப்பிட்ட அபரக்கிரியைகளைப் பிள்ளைகள் விதிப்படி செய்வதன் மூலமும்; அமாவாசை, பௌர்ணமி விரதங்களை மேற்கொள்வதன் மூலமும், இறந்த பெற்றோர்கள் அபுத்திபூர்வமாகத் தாம் வாழ்ந்த காலத்தில் இயற்றிய பாவ வினைகள் வேரோடு களையப்படுகின்றன. இவர்களின் உயிர்கள் ஆன்ம ஈடேற்றம் பெறுகின்றன. இதுவே, மகன் தன் தந்தை தாயாருக்கு ஆற்றும் மகத்தான உதவியாகும். அப்பொழுதுதான், “இவன் தந்தை என்நோற்றான் கொல் எனுஞ் சொல்” என்ற வள்ளுவர் வாக்கு மெய்ம்மை பெறுகின்றது.

“மைந்தனைப் பெறுகின்றது மாசிலாப்
புந்தியன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
வந்தமில் கடனாற்றுதற் கேயன்றோ”

மைந்தனைப் பெற்று, அன்போடு வளர்த்து, சிறந்த கல்வியளித்து, அவையில் முந்தியிருக்கச் செய்வதற்குத் தந்தை தாயார் எடுக்கும் இடையறா முயற்சிக்கு என்ன காரணம்? காரணம் உண்டு. ஆம், தந்தை தாயார் இறந்த பின் முறைப்படி செய்ய வேண்டிய கடன்களை நிறைவேற்றுவதற்கும், பின்னர் ஆண்டுதோறும் அவர்களை நோக்கி சிராா்த்தம் செய்வதற்கும், ஒவ்வோர் அமாவாசை, பௌர்ணமித் தினங்களில் விரதம் அனுட்டிப்பதற்கும் அவற்றின் வழி இறந்த உயிர்கள் பழவினைகள் நீங்கப் பெற்று சாந்தி, ஈடேற்றம், முத்தி ஆகியவற்றை அடைவதற்கும், இப் புத்திரர்களின் அறிவுபூர்வமான, சிரத்தை பூர்வமான உதவி தேவை என்பதற்காகவேயாகும். ‘புத்’ எனும் கொடிய நரகத்தில் வீழாது பெற்றோர்களைக் காப்பாற்றுபவனே புத்திரன் ஆவன். எனவே, ஆடி அமாவாசையின் மகத்துவத்தை உணர்ந்து, அத்தினத்தில் முறைப்படி தென்புலத்தார் வழிபாடு செய்து சைவ ஆசாரங்களைப் பேணி, இறந்'த நம் முன்னோர்களின் நல்லாசிகளைப் பெற்று உய்வோமாக.

# வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை

பொன்னம்பலபிள்ளை நாவலர் அவர்களுக்கு மருமகரும் மாணவரு மாவார்.

கந்தபுராணத்திலே திருமணப் படலங் களும் மற்றைய விசேட பகுதிகளும் பொன்னலம்பலபிள்ளைக்குப் பாடஞ் சொல்லி வைக்கப்பட்டன. திருச்சிற்றம்பலக் கோவையார் உரை, திருக்குறள் பரிமேல ழகருரை, நன்னூல் விருத்தியுரை ஆகிய மூன்று நூல்களையும் வசனம் வசனமாக நாவலர் அவர்களிடம் படித்தவர் பொன்னம் பலபிள்ளை. அவருடைய குருசிஷ்ய படிப்பு அவ்வளவே. அப்பொழுது பிரசித்தி பெற்று விளங்கிய கோப்பாய் சபாபதி நாவலர் உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை, மகாவித்துவசிரோமணியாய் விளங்கிய பிரமசிறீ சி. கணேசையர் என்பவர்களை உள்ளிட்டவர்கள் – யாழ்ப்பாணத்திற் படித்த வர்கள் என்றிருந்தவர்கள் எவர்களோ அவர்கள் அனைவரும் பொன்னம்பல பிள்ளையிடம் பாடங்கேட்டவர்கள்.

தென்னிந்தியாவில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களை நடமாடும் வாசிகசாலை என்பார்கள். அவ்வாறே இங்கே பொன்னம்பலபிள்ளை நடமாடுஞ் சர்வகலாசாலையாக விளங்கி னார். தெருக்கள், தெருத்திண்ணைகள், குளக்கட்டுக்கள், மரநிழல்கள், பொன்னம் பலபிள்ளை பாடம் சொல்லும் இடங்கள், பொன்னம்பலபிள்ளை அழகுகள், நவ இரசங்கள் சொட்டச்சொட்டப் பாட்டுக் களுக்கு உரை விரித்தற்கென்றே பிறந்தவர் என்று சொல்லுவார்கள். அவரை மாண வர்களாகிய மதுகரங்கள் எப்போதும் சூழ்ந்துகோர்ணடே இருப்பார்கள். உச்சி யிலிருந்து உள்ளங்கால் பரியந்தம், உள்ளங்காலில் இருந்து உச்சி பரியந்தம் பொன்னம்பல பிள்ளையின் உருவம் இலக்கிய இரசனையினால் ஆனது. தனிக்கற்கண்டிற் செய்த மோதகம் போல இலக்கிய இரசனை மயமாயிருந்தார் பொன்னம்பலபிள்ளை. புதிது புதிதாகத் தமக்குத் தோன்றுகின்ற இலக்கிய இரச னையை யாருக்காவது வெளிப்படுத்தா மல் இருக்கமாட்டாமை பொன்னம்பல பிள்ளையின் நித்திய கலியாணகுணம். பொன்னம்பலபிள்ளை இந்த மாட்டாமை யாகிய இரச குணத்தை ஒருவாறு தணித்து முட்டுத் தீர்வதற்கு உபகாரஸ்தலங்களாயப் புராணபடனம் நடைபெறுகின்ற முக்கிய சைவாலயங்கள் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்திற் பிரசித்திபெற்று விளங்குகின்ற வண்ணை வைத்தியேசு வரன் கோயிலின் வித்தியா மண்டபம் ஒரு காலத்தில் நாவலர் அவர்களின் சைவப் பிரசங்கங்கள் பிரவாகிக்கும் இடமாயி ருந்தது. அதனைத் தொடர்ந்து அம்மண்ட பம் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை நவரசங்களுங் குதிகொண்டாடப் புராணங்களுக்கு உரை விரிக்கும் இடமாய் மாறி ஒரு சர்வகலாசாலை ஆயிற்று.

பொன்னம்பலபிள்ளை வியாக்கி யானஞ் செய்யும்போது ஒரு புறத்தே மாணவர்களும் வித்தவான்களும் ஏடும் எழுத்தாணியுமாய் இருப்பார்கள். மற்றொருபுறத்தே பெண்களும் ஏனைய

இடங்களில் ஆண்களும் எள்ளிட இடமின்றி இருப்பார்கள். குண்டூசி விழுந்தாற் கேட்கும். வாசிக்கிறவர் எச்சுதியில் எந்த இராகத்திற்குப் பாடலை வாசிப்பாரோ அச்சுதியில் அந்த இராகத்துக்கு பொன்னம் பலபிள்ளை உரைவிரிப்பார். விசேட வியாக்கியானங்கள் அலையலையாய் எழுந்து புரண்டுகொண்டிருக்கும். பொன் னம்பல பிள்ளைக்கு வாசிக்கின்றவர்கள் விசேட ஆயத்தம் செய்து கொண்டு வரு வார்கள். எந்த இடம் அந்த இராகத்திற்கு வாசிக்க வேண்டுமோ அந்த இடம் அந்த இராகத்திற்கே வாசிக்கப்படும். அன்றி, காலத்துக் கேற்பவும் இராகம் மாறுதல் அடையும். பொன்னம்பலபிள்ளைக்கு வாசிக்கிறவர் களுக்குப் பிரத்தியேகமான மரியாதை உண்டு.

பொன்னம்பலபிள்ளைக்கு உள்ளக் கிளர்ச்சி எவ்வளவு அமையுமோ அவ் வளவுக்கு அவர் விரிக்கும் உரைக்கருத்து களும் புதியன புதியனவாய் ஊற்றெடுத்து பிரவாகிக்கும்.

**பூசனை பரிந்த பின்னர்ப் புவனமீன் றாள்தன்**
**கையைப் பாசம தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர்**
**கரத்துள் வைத்து நேசமோ டளித்தேன் என்னா**
**நெடுமறை மனுக்கள் கூறி வாசநல்லுதகமுய்த்தான்**
**மருகனென்றவனையுன்னி**

என திருவிருத்தம் கந்தபுராணத்திற் சுவாமி திருக்கல்யாணப் படலத்தில் வருகின்றது. இமயமலை அரசன் தன் தவப்புதல்வியாகிய உமாதேவியாரின் திருக்கரத்தைப் பரஞ்சுடராகிய பரம சிவத்தின் திருக்கரத்துள் வைத்துத் தாரைவார்த்துத் தத்தஞ் செய்கின்றான். பாட்டிறுதியில், "மருகனென்றவனை யுன்னி" என்று ஒரு தொடர் வருகின்றது. அவனை – அந்த பரமசிவனாகிய பரமசிவத்தை மருகன் என்று உன்னி – தனக்கு வந்து வாய்த்த மருகன் என்று மகிழ்ந்து தத்தம் செய்தான் என்று உரை விரிப்பது வழக்கம்.

ஆனால் ஒருநாள் பொன்னம்பல பிள்ளை அப்பாடலுக்கு உரைசொல்லும் போது நினையாப்பிரகாரம் அந்த தொடருக்கு வேறொரு பிரகாரம் பொருள் விரித்து வியாக்கியானஞ் செய்தார்.

அந்த பரமசிவத்தை, மருகனென்ற வனை – ஒரு காலத்திலே தனது அறியா மையாலே தனக்கு மருகன் தானே என்று அகங்கரித்த அந்தத் தக்கனை (அவன் பட்ட பாடுகளை), உன்னி – இமயமலை அரசன் அப்போது சிந்தித், தான் அவ்வாறு நினை யாமல், புதல்வியை உலகமாதா ஆகவும், பரமசிவத்தை முழுமுதற் பரம்பொருளா கவும் கருதித் தத்தஞ் செய்தான் என்பது பொன்னம்பலபிள்ளையின் அன்றைய வியாக்கியானத்தின் சிறிய சுருக்கம்.

இந்த வியாக்கியானம் ஓர் இரவு நடந்தது. அடுத்தநாட் காலை தொடக்கம் பலவாரம், பலமாதம், பல வருடகாலம் "மருகனென்ற வனையுன்னி" என்ற தொடர் படித்தவர் மத்தியிற் பேசப்பட்டு வந்தது. இன்றைக்குங் கிராம மாந்தர்களிற், சுவாமி கலியாணப் படிப்புத் தினத்தில் மேற்படி தொடரும், அதனைத் தொடர்ந்து, பொன்னம்பல பிள்ளையின் அருமைப்பாடும் எடுத்துப் பேசப்பட்டு வருகின்றன.

"ஆவத்த நேர்மாக்கள் வாழ் அரிபுரம்" என்பது மார்க்கண்டேயப் படலத்தில் வருகின்றதொரு தொடர். இத்தொடரில்

ஆ என்பதற்குக் காமதேனு என்று பொருள் கூறி, அப்பாலுள்ள சொற்களுக்குக் காமதேனுவோடியையப் பொருள் பண்ணி வந்தார்கள். ஒருநாட் பொன்னம்பலபிள்ளை அந்தத் தொடரை, “ஆபத் அத்தம்” என்று பிரித்து, ‘ஆபத்து காலத்தில் உதவும் சேமநிதி போன்றவர்கள் அரிபுரத்து மனிதர்கள்” என்று வியாக்கியானஞ் செய்தார். தபம் என்னுஞ்சொல் தவம் என்று வருவதுபோல, ‘ஆபத்’ “ஆவத்’தென நின்றது.

இவ்வாறே எத்தனையோ தொடர்களுக்கும் பாட்டுக்களுக்கும் விசேட கருத்துக்கள் பொன்னம்பலபிள்ளையின் மாணவ பரம்பரையில் உள்ளவர்கள் நூதனம் நூதனமாக சொல்லுவார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து இராமநாதபுரம் சமஸ்தானத்திற்குப் போகின்ற வித்துவான்களை மதுரைத் தமிழ்ச்சங்கத் தாபகரான பண்டித்துரைத்தேவர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை எப்படியிருந்து எவ்வாறு வியாக்கியானஞ் செய்வார் என்று வினவி, வினவிஅவர்கள் சொல்வதைக் கேட்டு கேட்டு வாயூறுவாராம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவருள், வன்றொண்டர் செட்டியார் என்பவர் ஒருவர். மிகப்படித்தவர். இவரைப்பற்றி உவேசாமிநாதையர் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். இந்த வன்றொண்டச் செட்டியாருக்குப் பிற்காலத்தில் கண்பார்வை மங்கிப்போனது. கண்ணின் சக்தி அனைத்தும் செவிக்குப் போய்விட்டது. அவர் செவி, நுண்செவி, “செவிக்குணவு இல்லாதபோது”, என்ற திருக்குறள் செட்டியார்க்குப் பொருத்தமானது. செவிக்குணவு தேடி ஒருமுறை செட்டியார் யாப்பாணம் வந்தார். வந்தவர் பொன்னம்பலபிள்ளை புராணத்துக்கு பொருள் விரிக்கும் இடத்துக்குப்போய் ஒரு புறத்தில் இருந்தார். வியாக்கியானந் திரை எறிகின்றது. செட்டியாருக்குத் தெவிட்டாது தித்தித்து அமுது ஊறுகின்றது. உடம்பு வெடிக்கின்றது போன்ற ஆனந்தம் மேலிடுகின்றது. செட்டியார் இருந்த படி மெல்ல மெல்ல இடம்பெயரத் தொடங்கிவிட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் எட்டிப் பொன்னம்பலபிள்ளையைக் கட்டித் தழுவி விட்டார். ஆராமையின் ஆற்றாமை அது.

நாவலர் அவர்களுக்குப் பெரிய புராணம் போலப் பொன்னம்பலபிள்ளைக்கு கம்பராமாயணம் நரம்புத் தூய்களிலும் ஊறிக்கிடந்தது. சீவகசிந்தாமணியிலும் பொன்னம்பலபிள்ளைக்கு விசேட பயிற்சி உண்டு.

சீவகசிந்தாமணியை முதல்முதற் பதித்தபோது உ.வே.சாமிநாதையர் ஒரு பிரதியைப் பொன்னம்பலபிள்ளைக்கு அனுப்பி ஒரு கடிதமும் எழுதியிருக்கின்றார். அக்கடிதம் இது :

“பாற்கடலின் ஆழம் மந்தாமலைக்குத் தெரியுமேன்றி வேறு எந்த மலக்குந் தெரியாது. அதுபோலச் சீவகசிந்தாமணியின் ஆழம் உங்களுக்குத் தான் தெரியும். ஏதோ ஒருவாறு நான் பதிப்பித்திருக்கின்றேன். தாங்கள் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்” (என் சரித்திரம் – உ.வே.சா)

இப்படிச்சாமிநாதையர் எழுதுவாரேயானாற் பொன்னம்பலபிள்ளையின் சிந்தாமணிப் பயிற்சி எப்படியிருக்கும் என்பது சிந்திக்கத்தக்கது.

கம்பராமாயண இரசனையுஞ் சிந்தா மணி முதலிய காவிய இரசனைகளையுங் கந்தராபுராணத்துக்கு வியாக்கியானஞ் செய்கின்றபோது ஏற்ற ஏற்ற இடங்களிற் பொன்னம்பலபிள்ளை அள்ளிச் சொரி வார். அது வித்துவான்களாகிய மதுகரங் களுக்குப் புத்தம்புதிய அமிர்தமாய்ப் பொங்கிக் கொண்டிருக்கும்.

பொன்னம்பலபிள்ளை கந்தபுராணக் கருத்துக்களின் உயர்வையுங்காவிய இர சனைகளின் அளவையும் நன்கு அறிந்தவர். காவிய இரசனைகளைப் பொன்னம்பல பிள்ளை தலைமறைவாகவே வைத்துக் கொண்டார். நாவலர் அவர்கள் தென்னிந்தி யாவிற்கு போகின்ற காலங்களிலே சபா பதிச் செட்டியார் என்பவரின் வீட்டில், பொன்னம்பலபிள்ளை வித்துவ மதுகரங் களுக்குச் சீவகசிந்தாமணியைத் தித்தித்துக் காட்டுவதுண்டு. சிந்தாமணி பொன்னம்பல பிள்ளைக்கு மனப்பாடம். அக்காவியம் தன்னைக் கெடுத்து விட்டது என்றுஞ் சிலசமயங்களில் சொல்லுவாராம். அதனை அதற்குரிய வரிசையில் வைத்து அவர் வழங்கி வந்தார்.

நாவலர் அவர்களுக்கு பிறகு ஒரு சமயம் பொன்னம்பலவிள்ளை கம்பரா மாயண இரசனை மிகுதியினாலே வண்ணை வைத்தியேசுவரன் கோயிலிலே இரா மாயண வியாக்கியானம் ஆரம்பித்தார். அது காவிய ரசிகர்களுக்கு கிடைத்தற் கரிய அமிர்தபானமாக இருந்தது. எனினும், அருணூல்களுக்குரிய கோயிற் சந்நிதி யில் அது அடாது என்ற கருத்தும் இருந்தது. பொன்னம்பலபிள்ளைக்கு எதிர்சொல்ல ஆள் ஆர்? நாவலர் அவர்களும் இல்லையே. கம்பராமாயண இரசனை பெருகியது. வாலிவதை உச்ச நிலையை எய்தியது. அவ்வளவேதான் நடந்தது. அந்த அளவிற் பொன்னம்பலபிள்ளை இரசிகர்கள் கதறக் கதற மறைந்துவிட்டார். வாலிக்கு அம்பு விட்ட சோகம் பொன்னம்பலபிள்ளையை இழந்த சோகம் ஆயிற்று.

பொன்னம்பலபிள்ளையின் காவிய இரசனைகளை, கண்டவர்களைக் கேட்ட வர்களைக் கண்டவர்கள் தாமும் இக் காலத்துச் சாதாரண இரசனைகளையுங் கவிதைகளையுஞ் சகிக்கமாட்டார்கள்.

இலக்கியங்களிலே உயிரான இரச னைக்கு உரிய பொருள் எது என்று தெரிதல் வேண்டும். தெரிந்ததன் மேல் இரசனையை எடுத்துக்காட்டுதற்கு ஏற்ற பாசை நடை கைவரல் வேண்டும். இந்த இரண்டு மாயிருந்தவர் பொன்னம்பல பிள்ளை.

பொன்னம்பலபிள்ளையின் சங்கநூற் பயிற்சி பற்றித் திருகோணமலைக் கனக சுந்தரம்பிள்ளை நற்றிணை உரை முக வுரையில் எழுதியிருக்கின்றார். நற்றிணை உரையாசிரியருக்கு அதில் உண்டான சந்தேகங்களை பொன்னம்பலபிள்ளை தீர்த்து வைத்தார் என்று, அதில் வருகிறது.


**பொன்னம் பலப்பெயர்ப் புட்கலா வர்த்தம்**
**புராதன நியாயோததி**
**புகழ்சங்க லக்கியப் புணரிரா மாயணப்**
**பொருவறு மளக்கர்புவியிற்**
**றுன்னித் துலங்கிமலி சூதனொலி மலையாந்**
**தொல்பயோ ததிகாவியத்**
**துங்கவார் கரிபார தப்பரவை லக்கணத்**
**தொடுகடல்க டுய்த்தெழுந்தே**
**மின்னித் திடுக்கிட விடித்தியாழ்ப் பாணகிரி**
**மீதேறி நல்லைமுடிமேன்**

மேவிப் படிந்துசெந் தமிழ்தை நிதிமாரி
மிகவும் பொழிந்திட்டதிச்
சன்மத்து வித்தியார்த் திப்பயிர் தழைத்திடச்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

இச் செய்யுள் ஈழமண்டல சதகத்தி லுள்ளது. இதனை இயற்றியவர்கள் பொன்னம்பலபிள்ளையின் தலைசிறந்த மாணவரும், நயம்பட உரை விரிக்குந் திறத்திற் பொன்னம்பலபிள்ளையைப் பெரிதும் பின்பற்றியவர்களும், திருவாதவூரடிகள் புராணத்திற்குச் சிறந்ததொரு விருத்தியுரை எழுதிப் பொன்னம்பலபிள்ளையின் முன்னிலையில் அரங்கேற்றிப் பொன்னம்பலபிள்ளையால் உரையாசிரியர் என்ற பட்டம் சூட்டப் பெற்றவர்களுமான ம.க.வேற்பிள்ளைப் புலவர் அவர்கள்.

---

**மண்ணில்**
**23 - 07 - 1933**



**விண்ணில்**
**28 - 12 - 2001**

## குரும்பசிட்டி கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்கள்

### (ஈழத்தின் பிரபலமான ஓவியர், அரும்பொருள் சேகரிப்பாளர்)

அரும்பொருளை ஆயுள்வரை காத்தாய்
ஆன்மீகப் பெரியோரை மதித்தாய்
கலையின்பமே நிலையின்பமாய்
காலமெல்லாம் கருதி வாழ்ந்தாய்
நீவரைந்த ஓவியங்கள்
நிலைபெற்று வாழ்கிறது
மண்ணின் வரலாறு மாசுபடக் கூடாதென
மண்ணில் மடியும்வரை உரைத்தாய்
காலங்கள் மாறினாலும்
கலைஞானி உன் கருத்து வாழும்
தனிமனிதனாய் வாழ்ந்து
தவஞானக் கலைவளர்த்த உனக்கு
ஆயிரம் நன்றிகள்
அன்றாடம் சொல்வோம்.

– ஆதி

# பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை

உரையாசிரியர் என்றும் பிள்ளைப் புலவர் என்றும் போற்றப்பட்ட ம.க.வேற் பிள்ளையின் மூத்த மகனே பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை. இவர் 1885ஆம் ஆண்டு மார்கழி மாதம் கார்த்திகை நட்சத்திரத்திலே மட்டுவிலிற் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியைப் புலோலியில் வேலாயுதபிள்ளை என்பவர் தொடங்கிய பாடசாலையிற் பெற்றார். புலோலியில் ஆங்கிலக் கல்வியையும் பெற்றதுடன் தந்தையாரிடம் தமிழ் இலக்கிய இலக் கணங்களையும் புராணங்களையும் கற்றார். இவருக்குச் சிறு வயதாக இருந்த போதே சென்னை, சிதம்பரம் நாவலர் பாட சாலைக்குத் தலைமை ஆசிரியராகத் தந்தையார் சென்றுவிட்டார். அதனால் மாமனரான சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரின் பராமரிப்பிலேயே இவரும் நான்கு சகோதரர்களும் வளர்ந்தனர். சம்பந்தரின் சைவத் தமிழ்ப் பணிகளுக்கான அடித்தளம் மாமனாராலும் தந்தையாராலும் இடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தர், கல்வி கற்பது நிறைவடைந் ததும் தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்டதும், அக்காலத்தில் அமெரிக்க மிஷன் பாடசாலை என்று அழைக்கப்பட்டதுமான மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலை பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1912ஆம் ஆண்டு தொடக்கம், தாம் ஓய்வுபெறும்வரை 35 ஆண்டுகள் யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். இங்கு இவர் கற்பித்த பாடங்கள் தமிழும் சமயமும் ஆகும். மரபுவழிக் கல்வி மூலம் வந்த இலக்கிய இலக்கண அறிவைப் பெற்றிருந்த தோடு நகைச் சுவையாகவும் கற்பிக்க வல்லவராக இருந்தமையால் உயர் வகுப்பு மாணவருக்கு கலகலப்பாகக் கற்பித்து வந்தார்.

1912ஆம் ஆண்டிலிருந்து இந்து சாதனம் பத்திரிகையின் உதவிப் பத்திரிகையாசிரி யராக 32 வருடங்கள் பணிபுரிந்தார். இவரது விடாமுயற்சியாலே, மாதம் இருமுறை வெளிவந்த பத்திரிகை வாரம் ஒரு முறையாக வெளிவரத் தொடங்கியது.

இந்து சாதனம் சம்பந்தர் என்றவுடன் எவருக்கும் முதலில் நினைவுக்கு வருவது உலகம் பலவிதம் என்ற தலைப்பில் இவர் எழுதிய தொடர் கதைகளே. இத் தொடர் கதைகள் வெளிவந்த காலத்தில் அதிகாலை யிலேயே மக்கள் பத்திரிகையைப் பெற முண்டியடிப்பார்கள். சமயப் பத்திரிகையாக மட்டுமே வெளிவந்த இந்து சாதனத்தை இலக்கியப் பத்திரிகையாகவும் மாற்றியவர் சம்பந்தரே.

சம்பந்தரின் தொடர் கதைகள் பின்னர் கோபாலநேசரத்தினம், காசிநாதன், நேசமலர், துரைரத்தினம், நேசமணி என்றும் மூன்று நாவல்களாக வெளி வந்தன. இந்நாவல்கள் ஈழத்து நாவல் உலகிற் சம்பந்தருக்கு முக்கியமான இடத்தைப் பெற்றுக் கொடுத்தன. ஈழத்தின் முதற் பெண் நாவலாசிரியரான மங்கள நாயகம் தம்பையா, நொறுங்குண்ட

இருதயம் என்றும் கிறிஸ்தவ மதச் சார்பான நாவலை வெளியிட்ட காலப் பகுதியிற் சம்பந்தரின் நாவல்கள் சைவ சமயச் சார்பானவையாக அமைந்தன. இவர் எழுதிய ஓம் நான் சொல்லுகிறேன் என்னும் சிறுகதை இடைநிலை வகுப்புப் பாடநூலிலே இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

நாடகத் துறையிலும் ஆர்வம் மிக்க வராகச் சம்பந்தர் இருந்தார். இந்துக் கல்லூரியில் இவரது காலத்தில் (1920) உருவாக்கப்பட்ட நாடகக் கழகத்தின் மூலம் பல நாடகங்கள் மேடையேற வழிகாட்டி யாக இருந்தார். 1914இல் வண்ணார் பண்ணையில், சம்பந்தர், முதலியார் செ.இராசநாயகம் போன்றோர் இணைந்து சரஸ்வதி விலாச சபை என்னும் நாடகக் கழகத்தை ஆரம்பித்தனர். இச் சபையினர் வழங்கிய எட்டு நாகடங்களில் ஆறு நாட கங்களைச் சம்பந்தரே எழுதினார்.அவர் எழுதிய நாடகங்களில் உருக்குமாங்கதன், சகுந்தலை, மார்க்கண்டேயர், ஆரணிய காண்டம், அயோத்தியோ காண்டம் என்பவை குறிப்பிடத்தக்கவை.

தந்தையாரான ம.க.வேற்பிள்ளையின் வழியிலே சிறந்த உரையாசிரியராகவும் விளங்கிய சம்பந்தர், கதிர்காமவேலன் திருவட்பா, கல்வளை அந்தாதி, நமச்சிவாய மாலை என்னும் நூல்களுக்கு முழுமையாக உரை எழுதியுள்ளார். மாணவர்களுக்குரிய பாடநூல்களாக அமைந்த கம்பராமாயணம் மாரீசன் வதைப்படலம், திருக்குறள் முதல் இருபதுஅதிகாரங்கள், வில்லிபாரதம் இரண்டு சருக்கங்கள் முதலிய பல நூல்களுக்கு அவர் பகுதிகளாக உரை எழுதியுள்ளார். தான் உரை எழுதிய நூல்களும் தொகுப்பு நூல்களுமாக நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்த சிறந்த பதிப்பாசிரியராகவும் சம்பந்தர் விளங்கினார்.

இப்பணிகள் மட்டுமன்றி நாவலர் வழியைப் பின்பற்றிப் பிரசங்கம் செய்தல், பத்திரிகை மூலம் சமய கண்டனம் செய்தல், ஆலயப் புனருத்தாரணம் செய்தல், சமயப் பெரியார் வரலாறு, விரத மகிமை கூறும் நூல்களை வெளியிடல் போன்றவற்றிலும் இவர் ஈடுபட்டார். 1955ஆம் ஆண்டு சம்பந்தர் தமது எழுபதாவது வயதிற் காலமானார். இவர் பற்றிய மேலதிக தகவல்களுக்கு எனது 'பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்தப் பிள்ளை' என்னும் நூலைப் பார்க்கவும்.

# சுவாமி விபுலானந்தர்

**வெள்ளை நில மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது**
**காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ**
**மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ**
**காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல**
**கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது**
**பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ**
**வாட்ட முறாதவற்கு வாய்த்த மலரெதுவோ**
**பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல**
**மாட்டவிழி நெய்தலடி நாயகனார்வேண்டுவது".**

ஈழத்தின் கிழக்குக் கோடியில் காரைதீவு என்ற சிற்றூரிலே 1892ஆம் அண்டு பிறந்த மயில்வாகனம், தமிழ்கூறும் நல்லுகத் திற்குப் பொதுவான தமிழறிஞர் விபுலா நந்தராக மாறியமைக்கு அவரது பன்முகப் படுத்தப்பட்ட பணிகள் மட்டுமன்றி அவரது மனுக்குல நேசிப்பும் காரணமாகும். அவர் பல்துறை சார்ந்த பேரறிஞர். ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சி யாளராக, மொழி பெயர்ப்பாளராக, விளங்கிய விபுலானந்தர், சமூகத்துறவி யாக வாழ்ந்து செய்த தொண்டுகளும், தமிழிற்காற்றிய சேவைகளும் அவரை என்றும் நிலைக்கச் செய்வன.

தமது ஐந்தாம் வயதில் காரைதீவு நல்ரத்தின ஆசிரியரால் எழுத்தறிவிக்கப் பெற்ற மயில்வாகனம், 10வது வயதில் கல்முனை மெதடிஸ்ட் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். பின்னர் மட்டக்களப்பு செயின்ட் மைக்கேல் உயர்தர ஆங்கிலப் பள்ளியில் கல்வி கற்று வருகையில் தனது கணித நுட்பத்தினால் ஆசிரியரையே வியப்படையைச் செய்தார். தனது 16வது வயதில் கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் முதலாவது வரிசையில் தேர்ச்சி பெற்று, 1911ஆம் ஆண்டு கொழும்பு சென்று ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கழகத்திற் சேர்ந்து ஆசிரியப் பட்டம்பெற்றார். பயிற்சிக் கழகத்தில் இருக்கும் காலையில் உயர்தரத் தமிழாராய்ச்சியிலும் கருத்துச் செலுத்திய இவர், கொழும்பில் தமிழறிஞர் களாக விளங்கிய தென் கோவை கந்தையாபிள்ளை ஆகியோரிடம் தமிழி லக்கண இலக்கியம் கற்றார்.

1916ஆம் ஆண்டு விஞ்ஞானக் கலையில் டிப்ளோமா பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றதும் இவ்வாண்டிலே தான். பின்னர் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் உயர்தரக் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியராக இருக்கையில், லண்டன் பல்கலைக்கழக பி.எஸ்.எஸி பட்டதாரியானார். அடிகளார் 1931ஆம் ஆண்டில் தமிழ்நாடு சென்று. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்தார் (பண்டிதமணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை - 1936)

## அடிகளாரின் சமூகப் பணி

வித்தகர் விபுலானந்த அடிகளாரின் பன்முகப்பட்ட பணிகளில் சமூகத்துறவி யாக அவர் வாழ்ந்து செய்த தொண்டுகள்

அளப்பரியவை. அவர் மக்களைத் துறந்து, மக்களை விட்டு விலகித் துறவறம் பூணவில்லை. மக்களிடையே துறவியாக வாழ்ந்து சமூகத்தின் துயரங்களிலும், மகிழ்ச்சிகளிலும் பங்கேற்றார். யாழ்ப் பாணம் யோகர் சுவாமிகளின் பழக்கம், துறவுள்ளம் படைத்த மயில்வாகனத்தை விபுலானந்த அடிகளாக்கியது.

1922இல் சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்து, காவி பூண்டு இராமகிருஷ்ண மடத்துத் தலைவர் சுவாமி சிவானந்தரிடம் பிரம்மச்சாரி அபிஷேகம் பெற்று "பிரபோத சைதன்யர்" என்னும் தீட்சா நாமமும் பெற்றார். அங்கு "இராம கிருஷ்ண விஜயம்" என்ற தமிழ்ச் சஞ்சி கைக்கும் "வேதாந்தகேசரி" என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார். அத்தோடு "செந்தமிழ்" என்னும் பத்திரிகைக்கும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். ஆச்சிரம வாழ்க்கை முடிந்து சுவாமி விபுலானந்தர் என்னும் குருப்பட்டம் பெற்றார். குருவாக இருந்து அபிஷேகம் செய்தவர். ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சரின் நேர்ச்சீடர்களில் ஒருவரான சுவாமி சிவானந்தரராவார். கல்லடி உப்போடையில் தாம் அமைத்த ஆங்கிலப் பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் என நாமம் சூட்டியது. இவரது ஞாபகார்த்த மாகவே.

அதன் பின் ஈழம் திரும்பி, அந்நியர் ஆதிக்கத்தில் மதம், மொழி, கலாசாரம் முதலியவற்றில் தமது தனித்தவ இயல்புகளை இழந்து கொண்டிருந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பும் முயற்சி யிலீடுபட்டார். கல்வி நிறுவனங்கள் பலவற்றை நிறுவினார். மட்டக்களப்பு உப்போடையில் சிவானந்த வித்தியா லயம் என்ற ஆண்கள் பாடசாலை, திருமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு விவேகானந்த மகளிர் ஆங்கிலக் கல்லூரி, காரைதீவு சாரதா வித்தியாலயம் என்பன அவர் நிறுவிய கல்வி நிறுவனங்களாகும். தலைநகர் கொழும்பில் தமிழ்ப்பள்ளிக் கூடம் இல்லாத குறையைப் போக்க விவேகானந்த வித்தியாலயத்தைத் தொடங்கினார். ஒரு சமூகத்துறவி நிறுவிய கல்விச் சாலைகள் அவை. அத்துடன் கொழும்பு, மட்டக்களப்பு, திருகோண மலை முதலிய இடங்களில் இராமகிருஷ்ண ஆச்சிரமங்களை நிறுவினார். விபுலா னந்தர் ஆன்மீகவாத சன்மார்க்க நெறியாளராக வாழ்ந்தார்.

"நாம் மனிதர் என்னும்பெயருக்கு முழுதும் தகுதிபெற வேண்டுமனால், இன்று முதலே சன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்க வேண்டும்" என்றார்.

"பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனே தான் நல்ல நிலையை அடைய விரும்புவதே உண்மை யான சன்மார்க்கமாகும்" என்றுமுரைத்தார்.

ஈழம் ஈன்றெடுத்த அறிஞர்களில் விபுலானந்தர் முற்றிலும் வேறுபட்டவர். சாதி, மத, மொழி, இன ஏற்றத்தாழ்வு களுக்கும், ஏழை, பணக்காரன் என்ற வர்க்க வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவர். யாழ்ப்பாணத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி யின் ஆசிரியராகவும் பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும் 1917-1922 காலகட்டத்தில் கடமையாற்றி யுள்ளார். கடமையொழிந்த வேளைகளில் வறுமையிலும், சாதியப் பாதிப்பிலும்

நலிவுற்ற மக்களிடையே உலாவினார். அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து ஆறுதல் கூறினார். அதனால் "பெரிய கோயில் வாத்தியார்" எனச் சாதாரண மக்களால் விரும்பி அழைக்கப்பட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியபோது அவரது இந்த மனித நேய யாத்திரை இந்திய சேரிப்புறங்களில் பரிவோடு நிகழ்ந்தது. எனவே தான் சமூகத்திலிருந்து பிரிந்து தனித்து விபுலாநந்தர் நிற்கவில்லை. அவரது சிந்தனைகள், நடத்தைகள் இரண்டும் அவரை ஏனைய அறிஞர்களினின்றும் வேறுபடுத்துவனவாகவுள்ளன.

தாய்மொழிக் கல்விக்கும் அறிவியல் கல்விக்கும் வித்திட்டவர்களில் விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர். ஆங்கில மொழிக்கல்வி ஆதிக்கம் பெற்றிருந்த ஒரு காலவேளையில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கி, அறிவியற்கல்வி தமிழிலும் போதிக்கவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். அறிவியற்கலைச் சொல்லாக்கத் துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்துள்ளார். யாழ்ப்பாணம் வாலிப காங்கிரசுடனும் தாய்மொழிக் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் விபுலாநந்தர்.

மெல்போர்ன் தமிழ்ச்சங்கம் விபுலாநந்த அடிகளாரின் 60வது நினைவை முன் கூட்டியே நினைவு கூர்ந்து ஜூலை 21, 2006ஆம் ஆண்டில் முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

## அடிகளாரின் இலக்கியப் பணி

"சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்" என்று மூன்று தொகுப்பு நூல்கள் 1997ஆம் அண்டி இலங்கையில் வெளிவந்துள்ளன. இவற்றில் விபுலானந்தரின் நூற்றி இருபத்தேழு (127) தமிழ்மொழி, ஆங்கில மொழிக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. அவரது ஆக்கங்கள் முழுவதும் தொகுக்கப்பட்டு விட்டன என்று சொல்லமுடியாவிட்டாலும், அநேகமானவை தொகுக்கப்பட்டுவிட்டன என்று தொகுப்பாசிரியர் உரையில் சொல்கிறார்கள். இப்பணியை மேற்கொண்ட வ.சிவசுப்பிரமணியம் மற்றும் சா.இ. கமலநாதன் ஆகியோர்.

## சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்

தொகுதி 3இல் ஆங்கில வாணி என்ற ஒரு கட்டுரை இருக்கின்றது.இது பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் மணி மலருக்காக 1941ஆம் ஆண்டு எழுதப்பட்டு அந்த மலரில் வெளிவந்துள்ளது.

"ஷேக்ஸ்பியரின் கவிதை வனப்பினை எடுத்துக்காட்டுவதற்காக அவரது நாடகங்களில் இருந்து சில காட்சிகளை மட்டும் மொழி பெயர்த்து இக்கட்டுரையிற் சேர்த்திருக்கிறார். ஷேக்ஸ்பியரின் கவி வனப்பினை மதங்கசூளாமணியில் சற்று விரிவாகக் கூறியிருக்கிறோம்" என்று விபுலாநந்தர் இக்கட்டுரையின் ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார். ஆங்கில வாணி என்பது ஆங்கில இலக்கியம் என்ற தலைப்பாக நாங்கள் எடுத்துக்கொள்ளலாம். மூன்று பகுதிகளாக இதில் இடம் பெறுகிறது.

(செ.க.சித்தனின் மே 22, 2006 வலைப்பதிவிலிருந்து)

அடிகளார் ஆக்கிய மதங்க சூளாமணி, நாடக இலக்கண அமைதி கூறும் ஒரு

நூலாகும். 1924ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் "நாடகத்தமிழ்" என்ற உரையினைச் சங்கச் செயலாளராக இருந்த டி.சி.சீனிவாஸ் ஐயங்கரின் வேண்டு கோளுக்கிணங்க இந்த "மதங்க சூளாமணி" என்ற நூலை எழுதினார்.

1937ஆம் ஆண்டு இமய மலையைக் காணச் சென்று மலைச்சாரலில் உள்ள மாயாவதி ஆச்சிரமத்தில் தங்கினார். அங்கு சிலகாலம் "பிரபுத்த பாரதா" என்ற ஆங்கிலச் சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்து பல கட்டுரைகள் எழுதி வெளி யிட்டார்.

கனடாவில் வாழும் ஈழத்துப் பூராடனார் (க.தா.செல்வராசகோபால்) என்ற கவிஞர் 1983ஆம் ஆண்டில் விபுலாநந்த அடிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் "விபுலா னந்தர் பிள்ளைத் தமிழ்" என்ற பிரபந்த நூலை வெளியிட்டிருக்கின்றார். அதில் நூலாசிரியர் ஈழத்துப் பூராடனார் விபு லானந்த அடிகளாரை நேரிற் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை யாயினும், அவரது நேரடி வாரிசான புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்றதும், அடிகளாரின் சகோதரியின் புதல்வன் திரு.பூ.சுந்தரம் பிள்ளையுடன் உடன்சாலை மாணாக்க னாக நெருங்கிய நட்புக்கொண்டிருந்ததும் இந்தநூல் உருவாக்கத்திற்கு உசாத்துணை யாக அமைந்ததாகக் கூறுகின்றார்.

அடிகளாரின் மதங்க சூளாமணியை ஆய்வு செய்தும், மறுபதிப்பு செய்தும் அதன் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு 800 வெண்பாக்கள் அடங்கிய கூத்தர் வெண்பா என்னும் நாடகத் தமிழ் இலக்கண நூல், மதங்க சூளாமணியின் இரண்டாவது பாகான வடமொழி நாடக வியலின் தமிழாக்கத்தின் உரை நடையை விருத்தங்களாகச் செய்து கூத்தர் விருத்தம் ஆகிய நூல்களையும் செய்துமுடித்திருக் கின்றார். ஈழத்துப் பூராடனார்.

விபுலானந்தர் பிள்ளைத் தமிழில் ஒவ்வொரு செய்யுட்களிலும்

1. அடிகளாரின் வரலாறு
2. அடிகளாரின் தாயக வளம்
3. அவரின் போதனைகள் ஆகியவை

இடம்பெற்றுள்ளன.

ஈழத்துப் பூராடனார் இந்த விபுல னாந்தர்பிள்ளைத் தமிழில் "நான் கண்ட விபுலானந்த அடிகளார்" என்ற தலைப்பின் கீழ் இப்படித் தருகின்றார்.

**மீன் வெண்ணுருவில் நீரரர்கள்**
**மீட்டு மிசையில் விளிப்பண்**
**மளிருஞ் சேதி விபுலானந்தர்**
**மிடையக் கேட்டேன் இளம் வயதில்**
**தேன் மது சொரியும் இலக்கியத்தின்**
**திகழுஞ் சுவைக்கோ ருரைப்பகுதித்**
**திரட்டா ரமுரைநடைச் சிலம்பதிலே**
**திருவடி பொழிவதன் சுவைகண்டேன்**
**மான்கள் மருளும் மதர் விழி வாழ்**
**மட்டக்களப்பின் திருமகனை**
**மற்றும் நேரிற் கண்டிடாத**
**மருளிற் காலம் மடிய நின்றேன்**
**வான்மழை எனவவர் வருவார் ஓர் கால்**
**வந்தித் திடுவென் எனவிருந்து**
**வள்ள லமரராய் ஆன பின்னே**
**வாய்த்ததித் தருணம் வலிந்துருட்டே**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தமிழ்மொழி இலக்கிய பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கு

அருட்டிரு விபுலானந்த அடிகளாரின் "கங்கையில் விடுத்த ஓலை" ஒரு பாடப் பகுதியாக இருந்தது. அந்தக் கவிதை நயத்தை மாணவர்களுக்கு உதவும் வகையில் பொழிப்பும், விளக்கமும் கொண்ட உபநூலை இலக்கிய வித்தகர் த.துரைசிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்) எழுதி சிறீ சுப்பிரமணிய புத்தகசாலை வெளியீடாக அக்டோபர் 1991ஆம் ஆண்டு வெளிவந்தது. அந்நூலின் முகவுரையில் நூலாசிரியர் திரு.த.துரைசிங்கம் அவர்கள் இவ்வாறு கூறிச் செல்கின்றார்.

அடிகளாரின் "கங்கையில் விடுத்த ஓலை" தனிச்சிறப்பு வாய்ந்தது. இமய மலைச் சாரலில் தவப்பள்ளியில் அடிகளார் வாழ்ந்த காலத்தில் அவரது இனிய நண்பர் கந்தசாமி மறைந்த செய்தியைக் கேள்வியுற்றார். அச்செய்தி அவரின் மனதைப் பெரிதும் வருத்திற்று. கந்தசாமிப் புலவனுடன் வேட்களத்தில் ஒன்றாகக் கல்வி பயின்ற காலை தாம் பெற்ற அனுபவங்களை எண்ணிப் பார்க்கின்றார். அவரது பழுத்த தமிழ்ப்புலமையும், தூய்மையான வாழ்வும், சிறந்த பண்புகளும் அடிகளாரின் உள்ளத்தில் எதிரொலிக்கின்றன. துயரம் மிகுகின்றது. உள்ளத்துணர்வு கட்டுமீறிப் பாய்கின்றது. கவிதை வடிவில் அதன் பேறாய்க் கங்கையில் விடுத்த ஓலை பிறக்கின்றது.

நெருங்கிய ஒருவர் இறந்தகாலை அவர்க்கிரங்கிப் பாடிய கையறு நிலைப் பாடல்கள் பலவற்றை சங்க இலக்கியங்களில் காண்கின்றோம். அதற்கமைய அடிகளாரின் "கங்கயையில் விடுத்த ஓலை" ஓதுவகையில், புதுமெருகு பெற்றுத் திகழ்கின்றது. இது முற்று முழுதாகக் கையறு நிலைப் பாடலாக இல்லாவிடினும் அதன் சாயலில் எழுந்த தூதிலக்கியமாக அமைவதைக் காணமுடிகின்றது. முதல் இரு பாடல்களிலேயே அடிகளார் தமது நண்பனின் குண நலன்களை, பழுத்த தமிழ்ப் புலமையினை நினைவு கூருகின்றார்.

**"எழுந்தறிந்து கலைபயின்றோ நின்றமிழினிய நூல்**
**எத்தனையோ வந்தனையு மெண்ணியாழுங் கண்டோன்**
**பழுத்த தமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்**
**பணிந்தமொழிப் பெரும் புலவன் கனிந்த குணநலத்தான்"**

**"சொல்வகையுஞ் செற்றொகையுஞ் சொன்னடையுமுணர்ந்தோன்**
**சொல்லவல்லான் சொற்சோராத் தூய நெறியாளன்**
**பல்வகைய நூற்கடலுட் படிந்துண்மை மணிகள்**
**பலவெடுத்துத் திரட்டிவைத்த பண்டாரம் போல்வான்"**

அன்பினால் பிணைக்கப்பட்ட அவரது உள்ளம் நண்பனை நினைந்து நினைந்து உருகுகின்றது. இத்துயரினை ஆற்ற வழியின்றித் தவிக்கின்றார். இமயமலையிலிருந்து வங்கக் கடலை நோக்கிச் செல்லும் புனிதமான கங்கை நதியின் சாரலையடைந்து அதன் அரவணைப்பில் சோகத்தாற் கொதிக்கும் தம்முளத்தை ஆற்றிக் கொள்ள முற்படுகின்றார்.

**"பொங்கியெழுந் துயர்க்கனலைப் போக்குதற்கும் மாயக்**
**கல்லென்று சொல்லிவிழும் நீரத்தரங்கக் கண்டேன்:**

பொங்கிவரும் கங்கை நதியின் நீரலைகள் போன்று அடிகளாரின் உள்ளத்திலிருந்து துயர அலைகள் பொங்கியெழுகின்றன. அவை கட்டுமீறிப் பாய்கின்றன.

"உள்ளத்திருந்தெழும் உணர்ச்சிப் பெருக்கே பாட்டுக்கு நிலைக்களன்" என்னும் ஆங்கிலப் புலவர் வோட்ஸ்வோத்தின் கூற்றுக்கமைய அடிகளாரின் உள்ளத்துணர்வினைப் பாடல்கள் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன.

வாழ்வில் இன்பமும் துன்பமும் வருவது சகசம். இந்த உண்மையை நன்கு அறியாதோரே இன்பம் வந்தபோது துள்ளிக் குதிப்பர். துன்பம் நேர்ந்தபோது சோர்ந்து அழுவர். இன்ப துன்பங்களாகிய சுழல் காற்றில் மானிடர் அலைகின்றனர். இந்த உண்மையை உணராதோர்க்கு இன்பமும் துன்பமும் மயக்கத்தையே செய்யும். இதனை அடிகளார் பின்வரும் பாடலில் அழகுற விளக்கியுள்ளார்.

**"இன்பவிளை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பார்
எமக்கு நிக ராரென்பர் இருகணத்தி னுளத்தில்
துன்பமுற மண்ணில்விழுந் திருகண்ணீர் சொரியச்
சோர்ந்தழுவார் மயக்கமெனுஞ் சுழல்காற்றி லைவார்"**

நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சியுடன் மனித வாழ்க்கையைப் பொருத்திப் பார்க்கின்ற அடிகளார் இன்ப துன்பச் சூழலில் அகப்பட்டுத் தவிக்கும் மனிதன் மரணமெனும் கரையில் ஏற்றுண்டு கிடப்பதையும், பின்னர் மறுபிறவியாகிய திரை கவர மீண்டும் பிறந்து இன்ப துன்பங்களில் மூழ்கித் தவிப்பதையும் நினைவூட்டுகின்றார். இப்படி :

**"மரணமெனுந் தடங்கரையி லெற்றுண்டு கிடப்பார்
மறுபிறவித் திரைகவர வந்தியையுங் கருவி
கரணமுறு முடலெடுத்த மண்ணுலகி லுழல்வார்
காதலிப்பா ரெண்ணிறைந்த வேதனையுட் புகுவார்"**

ஆசையே துன்பத்திற்குக் காரணமாகும். இந்த உண்மையை "காதலிப்பார் எண்ணிறைந்த வேதனையுட் புகுவார்" என்னும் அடியில் அடிகளார் அழகாகப் புலப்படுத்தி உள்ளார்.

இவற்றாறெல்லாம் வாழ்க்கை நிலையாமையினையும், கல்விச் சிறப்பினையும் தந்து எடுத்துக் கூறியிருக்கின்றார் அடிகளார். இவ்வுலகில் உள்ளார் அன்னத்தை, கிளியை, முகிலைத் தூதாக அனுப்புவது மரபு. இம்மரபுக்கமையவே அடிகளார் தாம் வரைந்து ஓலையைச் சிவ பெருமானின் செஞ்சடையில் வீற்றிருக்கும் இம்மரபுக்கமையவே அடிகளார் தாம் வரைந்த ஓலையைச் சிவபெருமானின் செஞ்சடையில் வீற்றிருக்கும் கங்கையெனும் தெய்வ நதி மூலம் அனுப்பத் துணிகின்றார்.

"உள்ளத்திலே உண்மை ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்னும் பாரதியின் வாக்குக்கிணங்க அடிகளாரின் உள்ளத்தெழுந்த உண்மை ஒளி கங்கையில் விடுத்த ஓலையில் நன்கு பிரகாசிக்கின்றது. அடிகளாரின் கவித்திறனை, கற்பனையாற்றலை, தமிழ்ப் பற்றைப் பறைசாற்றும் கங்கையில் விடுத்த ஓலை, தமிழ்உள்ளவரை அடிகளாரை நினைவூட்டும் என்பது திண்ணம்.

பஞ்சகிருத்திய நுட்பத்தைக் கூறும் நடராஜ வடிவத்தைப் பற்றியும் ஒரு நூலை ஆக்கித் தந்துள்ளார். கர்ம யோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம் முதலியன அவரது மொழி பெயர்ப்பு நூல்களாகும்.

அடிகளார் விபுலாநந்தரின் இலக்கியப் பணி குறித்துப் பேசும்போது அன்னார் ஆக்கிய இலக்கிய ஆக்கங்களில் தமிழுக்குப் புதிதாகவும் மகுடமாகவும் அமைவது யாழ் நூலாகும். பழந்தமிழரின் இசை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விபரிக்கும் ஒரு முதல் நூல். பண்டைத் தமிழரின் இசைக்கருவிகளாகிய வில் யாழ், பேரியாழ், மகர யாழ், செங்கோட்டி யாழ்,

சகோட யாழ் என்பன பற்றி யாழ் நூல் கூறுகின்றது. அடிகளாரின் பதினான் காண்டு ஆராய்ச்சியின் பயனாக யாழ் நூல் தமிழுக்குக் கிடைத்தது. யாழ் நூல் ஆராய்ச்சிக்காக தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று 15 ஆண்டுகள் ஆராய்ந்து கரந்தை தமிழ்ச்சங்க ஆதரவில் திருக்கொளம்புதூர்த் திருக்கோயிலில் 1947ஆம் ஆண்டு ஆனித் திங்கள் யாழ் நூல் அரங்கேற்றம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

பாரிசவாதத்தினால் தாம் பீடிக்கப்பட்டி ருந்தும் தமது 45 வருடக் குறிக்கோள் நிறைவேறிய திருப்தியில் இருந்த சுவாமி விபுலானந்தர் யாழ் நூல் அரங்கேறிய அடுத்த மாதம் 1947ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ஆம்திகதி அவர் விண்ணுலகம் அடைந்தார்.

சிவானந்த வித்தியாலய முன்றலி லுள்ள மரத்தின்கீழ் சுவாமிகளின் பூத உடல் அடக்கம் செய்யப்பட்டு அவரின் கல்லறை மேல் அவரால் பாடப்பட்ட

**"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"**

என்ற கவிதா வரிகள் பொறிக்கப் பட்டுள்ளன.

"மஹாகவி" உருத்திரமூர்த்தி அவர்கள் தந்த மெய்யான கவிவரிகளை மீள ஒப்பித்து யூலை 19 அருட்டிரு விபுலானந்த அடிகளாரின் நினைவு நாளில் அவர் தம் சிறப்பைப் போற்றுவோம்.

**"ஆங்கி லத்துக் கவிதை பலப்பல**
**அருமை யாகத் தமிழ்செய்து தந்தனன்**
**நாங்கள் மொண்டு பருகி மகிழவும்**
**நன்று நன்றெண உண்டு புகழவும்**
**தீங்க னிச்சுவை கொண்டவை தானுமே**
**தீட்டினான்: தெய்வ யாழினை ஆய்ந்ததால்**
**ஓங்கி னானின் உயர்வைப் பருகுவோம்!**
**உண்மை யோடவன் நூலும் பயிலுவோம்"**

---

*38ம் பக்கத் தொடர்ச்சி....*

| | | | |
|---|---|---|---|
| 4496 | காமாட்சி கந்தையா | மகளிர் இல்லம் | சங்கிலி-10 |
| 4543 | ம.ஈஸ்வரவல்லி | கொழும்பு | 150000.00 |
| 4613 | K.செல்வரட்ணம் | திருநெல்வேலி | 65000.00 |
| 4632 | Dr.A.காயத்திரி | அளவெட்டி | வயலீன்-01 |
| 4711 | காமாட்சி கந்தையா | மகளிர் இல்லம் | 270000.00 |
| 4764 | R.சசிகரன் | U.K | வயலீன்-03 |
| 4815 | அபயரம் | அவுஸ்ரேலியா | 3209900.00 |
| 4881 | ப.வைத்தியநாதன் | கனடா | 100000.00 |
| 4922 | K.ரகுநாதன் | ஜேர்மனி | பூட்டுக்காப்பு |
| 4945 | காமாட்சி கந்தையா | மகளிர் இல்லம் | 148500.00 |
| 4946 | K.சிவஞானப்பிரகாசம் | அவுஸ்ரேலியா பதக்கத்துடன் சங்கிலி | |
| 5022 | அபயகரம் | அவுஸ்ரேலியா | 1482290.00 |
| 5026 | தங்கம்மா இராஜதுரை | | 50000.00 |

# துர்க்காபுரம் மகளிர் இல்லம் வாழ்க பல்லாண்டு

துர்க்காதேவியின் நிழலில் துர்க்கா துரந்தரி ஏற்றிய
தூண்டாமணி விளக்கே துர்க்காபுரம் மகளிர் இல்லம்
அல்லலுற்று அழுத கண்ணீரோடு வந்த
அரிவையர்க்கு அஞ்சேலென அபயம் கொடுத்த ஆலயம்

விடிகாலைப் பொழுதில்
வீதியெல்லாம் மழலைத்தமிழ் கேட்போம்
மழையோ மின்னலோ மகளிர் பூக்கொய்து
மாலைகட்டி தேவிதுர்க்கை வலம் வருவார்

பட்டுப்பாவாடை தாவணிப்பண்பாடு
பண்ணோடு பயபக்தி பாரம்பரியம்
தெல்லி நகர்த்தேவி தரிசனத்தில்
தெளிவாய்க் கண்டோமெனத் தேசம் உரைத்தது.

பிஞ்சுவயதில் தாய்மடி மறந்து,
பிதாவின் தயவறியா தெய்வக்குழந்தைகளின்
வாழ்வறிந்து நேசம் கொடுத்து
வளர்த்தெடுத்த தாய்மார் இல்லக்காவலர்.

ஆடுவார் பாடுவார் அழகான கோலம் போடுவார்
ஆற்றலால் பரிசுகள் குவிப்பார்
நல்லதோர் காப்பகம் நம்மண்ணிலென
நானிலமறிந்து நாடித்தேடி உதவிற்று.

பல்கலைக்கழகம் சென்றனர் பதக்கமும் பட்டமும் பலரும் பெற்றனர்
அன்னை தங்கம்மா அறங்காவலர் நாமம்
அகிலமெல்லாம் அறமெனப் போற்றிற்று
முப்பத்தோராண்டு அகவைகாணும் இல்லம்
முழுமதியாய்ப் பிரகாசிக்கும்காட்சி சத்தியமாய்க் கண்டோம்
சத்தி துர்க்கை திருவருளால்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*

# மூலநோய் (Piles)

**Dr. S. டிசிஜயந்தி அவர்கள்**
*துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலை*

ஆசனவாயிலில் உள்ள இரத்தக்குழாய் களின் புடைப்பே மூலநோய் எனப்படும்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் படும்பாடு சொல்லில் அடங்காது. இத னாலேயே திடீரென அதிகமாக கோப்படு பவர்களைப் பார்த்து மூலக்கொதியன் என்று நாட்டுவழக்கில் கதைப்பதை அறிவீர்கள். இது இரண்டு வகைப்படும்.

1. உள்மூலம் – Internal piles
2. வெளிமூலம் – External pilse

உள்மூலம் எனப்படும்போது ஆசன வாயிலின் மேல்பகுதியில் உள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும் புடைப்பினால் உருவாகிறது. உள்மூலத்தினாலேயே அதி களவு மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள். இது பின்வரும் நிலைகளைக் கொண்டுள்ளது. முதலாவது நிலையில் இரத்தம் வெளியேறுவதால் அதாவது இரத்த நாளங்களை மலமானது கீறிச்செல் வதனால் இரத்தமானது வெளியேறுகிறது.

இரண்டாவது நிலையில் ஆசனவாயி னூடாக மென்சவ்வும் வெளியே வரும். இது மீண்டும் உட்சென்றுவிடும். மூன்றாம் நிலையில் வெளியில் வரும் மென்சவ் வானது மீண்டும் உட்செல்லாது வெளி யிலேயே காணப்படும்.

முதலாவது நிலையில் கவனம் செலுத் தாவர்களே 2ம், 3ம் நிலைகளிற்குத் தளப்படுகிறார்கள். முதலாவது நிலையில் வைத்திய ஆலோசனைப் பெறுவதுடன் உணவுப்பழக்கம், உடற்பயிற்சி போன்றன வும் இந்நோயிலிருந்து நிவாரணம் பெறமுடியும். இரண்டாம் நிலையிலும் மருந்து ஓரளவு பலனைத் தந்தாலும் 3ம் நிலை ஏற்படின் அறுவைச் சிகிச்சை மாத்திரமே தீர்வைத் தரும்.

## மூலநோய் ஏற்படுவதற்கான காரணங்கள்

1. மலச்சிக்கல்
2. நீண்டநேரம் தொடர்ச்சியாக இருத்தல் / நிற்றல்.
3. அதிகளவு அசைவ உணவு உட் கொள்ளல்.
4. இலைக்கறிவகைகள், பழங்கள், நீர் என்பவற்றை போதியளவு உட்கொள் ளாமை.
5. புகை மற்றும் மதுப்பழக்கம்
6. கர்ப்பவதிகள்
7. பரம்பரை
8. வேறு நோய்நிலைகள்
   e-g : மலக்குடலில் கோளாறு, வயிற்றில் கட்டி.
9. அதிக உடற்பருமன்

## இதன் அறிகுறிகள்

ஆசன வாயில் அரிப்பு, எரிவு
மலச்சிக்கல்
இரத்தம் வெளியேறுதல்
அடிக்கடி கோபம் ஏற்படல் / சினம் கொள்ளல்
மனம் தளரல் / குழப்பம்

வெளிமூலம் எனப்படும்போது குத வாயிலில் சிறிய முளை போன்ற தசை ஒன்றோ பலவோ காணப்படும். இதனால் பாரியளவு பாதிப்பு ஏற்படாவிடினும் நீண்ட நேரம் இருத்தல், சைக்கிள் ஓடுதல் போன்ற நிலைகளில் உராய்வு ஏற்படுவதால் நோ, எரிச்சல் ஏற்படுகிறது.

**இந்நோயிலிருந்து விடுபடுவதற்கு சில அறிவுரைகள்**

1. மலச்சிக்கல் ஏற்படாது தடுப்பதற்காக நார்த்தன்மையான உணவுகள், கீரை வகைகள், பழ வகைகளை தினமும் உட்கொள்ளல்.
2. உடற்பயிற்சி செய்தல், உடல்நிறை குறைத்தல்.
3. கோப்பி, தேனீர் அருந்துவதைக் குறைத்தல்.
4. அசைவ, காரமான, புளிப்பான உணவுகள், கிழங்கு வகைகள் உண்ணுவதைக் குறைத்தல் / தவிர்த்தல்.
5. அதிக நேரம் இருத்தல் / நடத்தலைக் குறைத்து மாறி மாறி இச்செயல்களை மேற்கொள்ளல்.
6. மணித்தக்காளி, அம்மான் பச்சரிசி கீரை சாப்பாட்டில் அதிகளவில் சேர்த்தல்.
7. கருணைக் கிழங்கினை வாரத்தில் 3 தினங்கள் சாப்பாட்டில் சேர்த்தல்.
8. மிளகுத்தூள், பெருஞ்சீரகத்தூள் என்வற்றை தேனில் கலந்து 5g காலை, மாலை உண்ணல்.
9. வில்வம்காய், இஞ்சி, சோம்பு என்பவற்றைச் சேர்த்து குடிநீரிட்டு குடித்தல்.
10. அத்திப்பிஞ்சு, பூண்டு, மிளகு, மஞ்சள், பருப்பு என்பவற்றைச் சமைத்து உண்ணல்.
11. வெங்காயச் சாறுடன் நெய் / சக்கரை கலந்து பருகுதல்.
12. தயிரில் வெங்காயத்தை ஊறவைத்து தினம் 2 வேளை உபயோகித்தல்.
13. கடுக்காய்த் தோலை தூளாக்கி விளக்கெண்ணெயில் கலந்து ஒரு தேக்கரண்டி உட்கொள்ளல்.
14. வட்டத்துத்தி இலையினை வதக்கி / பருப்புடன் சேர்த்து சமையல் செய்து சாப்பிடல்.
15. மாங்கொட்டை பருப்பை சிறுதுண்டுகளாக நறுக்கி உலர்த்தி இடித்து தூளாக்கி தினமும் 1 தேக்கரண்டி மோரில் உட்கொள்ளல்.
16. பிரண்டை கொழுந்து சிறிது நெய்விட்டு வறுத்து அரைத்து கொட்டைப்பாக்களவு காலை, மாலை உண்ணல்.
17. துத்தி இலையை ஆமணக்கெண்ணெய் விட்டு வதக்கி ஆறிய பின்னர் ஆசன வாயில் வைத்துக் கட்டுதல்.
18. குளிர் நீரில் (ஐஸ்தண்ணீர்) 10-15 நிமிடங்கள் ஆசனவாசலை வைத்திருப்பதால் இரத்தம் வெளியேறல் கட்டுப்படும்.
19. பாகல் இலையை விளக்கெண்ணெயில் வதக்கி ஆசனவாயில் கட்டிவர வெளி மூலம் தீரும்.
20. வலியுள்ள இடத்தில் முருங்கை இலை அரைத்துப் பூசுதல்.
21. வெண்குங்கிலியம், நல்லெண்ணெய் சம அளவு கலந்து நீரில் இட்டு மத்தால் கடைந்துவரும் களிம்பை மூலத்தில் பூச தீர்வு கிடைக்கும். இக் களிம்பானது நீரிலிட்டு பாதுகாப்பதுடன் 2 நாட்களுக்கு ஒரு முறை நீரை மாற்றவேண்டும்.

இவற்றிற்கு முதலாம் நிலை மூல நோய்கள் கட்டுப்பாட்டிற்கு வரும். அவ்வாறு இல்லாதவிடத்து வைத்தியரை அணுகி ஆலோசனையைப் பெற்று இந் நோயிலிருந்து விடுபடமுடியும்.

# சிறுவர் விருந்து

## சுவாமிக்கு மதம் இல்லை

- சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே!

தெய்வம் என்பது சாதி, மதம், மொழி கடந்தது. எல்லா உயிர் களுக்கும் பொதுவானது. இதை வலியுறுத்தும் ஒரு நிஜக் கதையை இன்று கேளுங்கள்.

தமிழ்நாட்டிலே ஸ்ரீமுஷ்ணம் என்று ஒரு வைணவத் தலம் உள்ளது. திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றானவராக சுவாமிக்கு இங்கே கோயில் உள்ளது. பூமியைக் காப்பாற்ற ரிஷிகளின் யக்ஞத்தில் எழுந்து வந்ததால் பூவராக சுவாமி என்றும், யக்ஞவராக மூர்த்தி என்றும்இந்த சுவாமிக்குப்பெயர்.

கடந்த நூற்றாண்டில் இந்த ஊரில் நடந்த கதை இது. இந்த ஊரிலே உப்பு வியாபாரத்துக்கு அதிகாரி ஒருவர் இருந்தார். வெங்கடராவ் என்ற இந்த அதிகாரி பூவராகசுவாமியிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். அதன் பலனாக அவருக்குச் சில மந்திர சித்திகள் கிடைத்தன. அதனால் ஊரில் உள்ள பலருக்கு நோய் தீர்த்தும், துன்பம் நீக்கியும் உதவி வந்தார் வெங்கடராவ்.

பக்கத்து ஊரிலே பெரிய பணக்காரரான பூராசாகிப் என்ற முஸ்லிம் தனவந்தருக்கு முதுகிலே ராஜபிளவை என்ற கட்டி ஏற்பட்டு மிகுந்த வருத்தம் கொடுத்தது. பலவித வைத்தியம் செய்தும் தீராத புண் புரையோடிக் கொண்டிருந்தது.

பூராசாகிப்பினுடைய நண்பர்கள் பலர் அவர்களில் ஒருவர் ஸ்ரீ முஷ்ணத்தில் வசிப்பவர். அவர் ஒருநாள் பூராசாகிப்பைச் சுகம் விசாரிக்கப் போனார். "நண்பரே! நீங்க எங்களூர் வெங்கட் ராவ்கிட்டே ஒருக்கா வந்து பேசுங்களேன்" என்று கேட்டார்.

பூராசாகிப் யோசித்தார். "ஒரு வைணவப் பக்தர்கிட்டே போய் என்னத்தைப் பேசுறது" என்று தயங்கினார். ஆனால், அவருடைய முகுதுப் புண் வருத்தம் மிகுதியான போது தாங்கமுடியாமல் தாமாகவே ஸ்ரீ முஷ்ணத்திற்குப் போனார். வெட்கடராவைப் சந்தித்துத் தமது நோயைப்பற்றிச் சொல்லிக் கவ லைப்பட்டார். மௌனமாக எல்லா வற்றையும் கேட்ட வெங்கடராவ் தம் பூஜை அறைக்குப் போய்த் தீர்த்தச் செம்புடன் வந்தார். பூராசாகிப்பின் கையிலே துளசி தீர்த்தத்தை வார்த்துக் "குடிச்சிட்டுப் போங்கோ" என்று சொல்லிவிட்டுத் தம் வேலை

யைப் பார்க்கப் போய்விட்டார். பூராசாகிப்பிற்கு ஒரு மாதிரி இருந்தது. "ஏன் வந்தோம்..." என்று நினைத்த படித் திரும்பிச் சென்றார்.

விட்டிற்குப் போன பூராசாகிப் தம் முதுகுவலி மிகவும் குறைந்துவிட்டதை உணர்ந்தார். அன்று இரவு மிக நிம்மதியாக உறங்கினார். இரவு கனவில் ஒரு வெள்ளைப் பன்றி வந்து தன் தந்தத்தால் முதுகைக் கிண்டுவது போலக் கண்டு திடுக்கிட்டு எழுந்தார். மேனி வியர்த்து நடுங்கியது. முதுகுவலி இருந்த இடமே தெரியவில்லை. மறுநாள் தம் முதுகிலே புரையோடி யிருந்த ராஜபிளவைக் கட்டி இருந்த இடமே இல்லாமல் போய்விட்டதைக் கண்டார் பூராசாகிப். அவரது குடும்பத்தார் எல்லாரும் இந்த அதிசயத்தை நேரிலே கண்டு வியந்தனர்.

பூராசாகிப் தமது நிலத்திலிருந்து 150 ஏக்கர் வயலை ஸ்ரீ முஷ்ணம் பூவராக சுவாமிக்கு என்று எழுதிக் கொடுத்துவிட்டார். அதன்பின் அவர் காலமாகும்வரை ஸ்ரீ முஷ்ணம் சுவாமியிடம் பயபக்தி கொண்டிருந்தார்.

பூராசாகிப்பின் சமாதி 'கிள்ளை' என்ற ஊரில் உள்ளது. மாசிமக உற்சவத்தின் போது ஸ்ரீமுஷ்ணம் பூவராக சுவாமி கிள்ளைக்கு எழுந்தருளி, பூராசாகிப்பின் சமாதியில் ஆரதி செய்யப்பெறுகிறார். பூராசாகிப்பின் குடும்பத்தினருக்கு பரம்பரையாகக் கோயில் பிரசாதம் அனுப்பப்படுகிறது.

இன்றுவரை ஸ்ரீமுஷ்ணம் பூவராக சுவாமி கோயில் சந்நிதி வரை சென்று வணங்க முஸ்லிம் சமூகத்தவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

கடவுள் பேதங்களைக் கடந்தவர் அல்லவா!


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

**தொடர்புகளுக்கு**

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# தெல்லிப்பழை கிழக்கு குருநாதசுவாமி கோவில்

திருமூலரால் "சிவபூமி எனச் சிறப்பிக்கப்பட்ட ஈழத்திருநாட்டின் 'சிரசு' என விள்ஙகும் யாழ்ப்பா ணத்திலுள்ள தெல்லிப்பழை கிழக்குப் பகுதியில் உள்ள பழம் பெருங் கோயில்களுள் முருகனுக்குரிய தனிப்பெரும்கோயிலாகத் திகழ்வது குருநாதசுவாமி கோவிலாகும். இத் தலத்தில் மூலமூர்த்தியாக ஞானப் பழமான பழனியாண்டவர் வீற்றி ருப்பது தனிச்சிறப்பாகும்.

இவ்வாலயத்தின் வரலாற்றை நோக்குவோமெனில் இது ஏறத்தாழ இருநூறு வருடங்களுக்கு முன் தோன்றியதாக நம்பலாம். "நல்லன் சீமா" என்று அழைக்கப்பட்ட காணியில் "குருநாதர்" எனும் வீரசைவர் புளிய மரத்தின் கீழ் ஒரு வேலாயுதம் வைத்து வழிபட்டுவந்தார். மாவை கந்தனின் திருப்பணிக்காக அப்புளிய மரம் தறிக்கப்படவே "தேற்றாவடி" என்றழைக்கப்பட்ட காணியில் மணற் கொட்டகையில் அவ்வேல் வைத்து வழிபடப்பட்டது என அறியக் கிடக்கிறது.

அமரர் ஆ.சிற்றம்பலம் வெள்ளைக் காட்டுக் கல்லில், விநாயகர், நாக தம்பிரான் விக்கிரகங்களைத் தாபித் தார். இக்காலப்பகுதியில் ஒரு நேரப் பூசை நிகழ்ந்தது. அமரர்கள் கா.பொன்னம்பலம், அவரின் சகோதரி சின்னட்டிப்பிள்ளையும் திருப்பணிகளைப் பூர்த்தி செய்து தண்டாயுதபாணி விக்கிரகம் பிர திஷ்டைசெய்து 1921இல் குடமுழுக்கு சிறப்பாக இடம்பெற்றது. 1928இல் உள்வீதி, வெளிவீதி மணிக்கோபுர மும் அமைக்கப்பட்டன. 1941இல் கோயில் அர்ச்சகருக்கான வீடும், 1949இல் ஈசான மூலையில் வைரவர் ஆலயமும் அமைக்கப்பட்டன.

4-2-1980இல் தொண்டர் சபை என ஒரு சபை அமைக்கப்பட்டது. காலப் போக்கில் இச்சபை செயலற்றுப் போக, 1989இல் முருகனடியார்களால் தெரிவுசெய்யப்பட்ட 15 உறுப்பினர் களைக் கொண்ட திருப்பணிப் சபையே செயற்படுகின்றது. இச் சபையின் விடாமுயற்சியின் பயனாக 29-01-1989இல் பாலாலயக் குட முழுக்கும் 6-5-1989இல் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் குழப்பநிலை காரணமாகத் தடைப் பட்ட நிர்மாணப் பணிகள் 27-11-2000இல் தொடர்ந்து நடைபெற்றன.

16-06-2003இல் குடமுழுக்குக் குரிய கிரியைகள் ஆரம்பமாகி விநாயகர், பழனியாண்டவர், ஆறுமுக சுவாமி, சிங்காரவேலர், வைரவர் ஆகியோருக்குத் தனித்தனியாக சாலைகள் அமைத்து சுபானு வருடம் ஆனி மாதம் 4ம்நாளில் (18-06-2003) சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் பிரதமகுருவாக இருந்து குடமுழுக்கை நடாத்தி ஆசியும் வழங்கினார். குருநாதனின் அருளாட்சி அன்று தொடக்கம் மீண்டும் நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாக விளங்கியது கந்தபுராணம் முழுவதும் ஏட்டுச் சுவடியில் எழுதிப் பேணப்பட்டமையாகும். ஏட்டுச் சுவடியை வைப்பதற்கு புத்தக வடிவில் ஒரு மரப்பெட்டியும் இதனைத் தாங்க அறுகோணவடிவில் அமைந்த ஒரு பீடமும் செய்து வைக்கப்பட்டிருந்தது. இவ்வேட்டுப் பிரதிக்குத் தினமும் இரு நேரப் பூசையும் செய்யப்பட்டு வந்தது. அத்துடன் வருடாவருடம் கந்தபுராணம் முழுவதும் படித்துப் பயன் சொல்லப் பட்டும் வருகிறது.

தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி, கந்தஷஷ்டி, திருக் கார்த்திகை, விசாகப்பொங்கல், திருவெம்பாவை என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

மேலும் பல சிறப்புக்களைப் பெற்று விளங்க பழனியாண்டவரின் பாதார விந்தங்களைப் போற்றி வணங்குவோமாக.'

## விளக்குத் திரியின் பலன்கள்

- தாமரைத்தண்டில் திரிபோட்டால் ஜென்ம பாவங்கள் நீங்கும்.
- வாழைத்தண்டு நூல்திரி போட்டால் குலதெய்வக் குற்றம், சாபம் நீங்கும்.
- புது மஞ்சள் சேலைத்துண்டில் திரி போட்டால் தாம்பத்தியத் தகராறு நீங்கும்.
- புதுவெள்ளை வஸ்திரத்தில் பன்னீரை விட்டு உலர வைத்துப் போட்டால் வீட்டில் இலட்சுமி கடாட்சம் வந்து சேரும்.
- சிவப்பு நிறத் துணியால் திரி போட்டால் திருமணத்தடை நீங்கும்.

– நன்றி

இந்து மக்களுக்கு ஒரு கையேடு

## மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கான அன்பளிப்பு விபரங்கள் ரூபா ஐம்பதாயிருத்துக்கு மேல்


**(2011 மே - 2013 யூன் வரை)**

| ப.சீட்டு இல | | | |
|---|---|---|---|
| 2480 | S.புஸ்பராணி | நோர்வே | 70000.00 |
| 2513 | S.புவனேந்திரன் | கோண்டாவில் | 50000.00 |
| 2533 | அபயகரம் | அவுஸ்ரேலியா | 2099859.20 |
| 2559 | அபயகரம் | அவுஸ்ரேலியா | 15000AUD |
| 2560 | அபயகரம் | அவுஸ்ரேலியா | 300AUD |
| 2561 | ரஞ்சி ரட்ணாகரன் | அவுஸ்ரேலியா | 900AUD |
| 2617 | நாகரட்ணம் | மலேசியா (யாழ் விளையாட்டுக்கழகம்) | 350000.00 |
| 2641 | நல்லம்மா குழந்தைவேலு | கனடா | 100000.00 |
| 2646 | இந்து சமய கலாச்சார அலுவலகம்-கொழும்பு | | 100000.00 |
| 2652 | இணுவில் திருவூர் ஒன்றியம் | கனடா | 114170.00 |
| 2715 | ந.இளஞ்செழியன் | நோர்வே | 170000.00 |
| 2724 | ஈழலிங்கம் | அவுஸ்ரேலியா | 8500AUD |
| 2725 | அபயகரம் | அவுஸ்ரேலியா | 703545.00 |
| 2726 | க.மகாலிங்கம் | அவுஸ்ரேலியா | 50000.00 |
| 2758 | A.சிவபாலன் | கொழும்பு | 50000.00 |
| 2759 | கந்தையா நீலகண்டன் | கொழும்பு | 60000.00 |
| 2779 | தியாகராசா பாலசுந்தரம் | யாழ்ப்பாணம் | தையல் இயந்திரம்-2 |
| 2830 | சிவானந்தம் பொன்னையா | கனடா | 1100AUD |
| 2831 | வித்தகன் சிவமாலா | கோப்பாய் | 50000.00 |
| 2898 | மு.இராஜசூரியர் | U.K | 50000.00 |
| 2911 | கலைவாணி | U.K | 100000.00 |
| 2913 | மு.சதீசன் | கனடா | 250000.00 |
| 2970 | P.ராஜேந்திரம் | அவுஸ்ரேலியா | 50000.00 |
| 2991 | P.யோகலிங்கம் | கனடா | 56000.00 |
| 3062 | M.பாலகிருஸ்ணன் | அவுஸ்ரேலியா | 115500.00 |
| 3118 | தவயோகராசா | கொழும்பு | 100000.00 |
| 3146 | மு.குலேந்திரன் | சித்தங்கேணி | 100000.00 |
| 3162 | Dr.P.லக்ஸ்மன் | யாழ்ப்பாணம் | 50000.00 |
| 3244 | சு.சிவபாலன் | கொழும்பு | 50000.00 |
| 3247 | ஈழநாதன் பிரமியா | சிங்கப்பூர் | 250000.00 |
| 3321 | கருணையானந்தன் | டென்மார்க் | 50000.00 |
| 3340 | மனிதநேய நிறுவனம் | கொழும்பு | 80000.00 |
| 3389 | V.கனகலிங்கம் | யாழ்ப்பாணம் | 100000.00 |

| | | | |
|---|---|---|---|
| 3438 | Dr.P.சின்னையா | அவுஸ்ரேலியா | 3604000.00 |
| 3441 | நக்கீரன் | உரும்பிராய் | 50000.00 |
| 3475 | S.மகேஸ்வரன் | சுவிஸ் | 50000.00 |
| 3537 | பாலகுமார் சறோஜினி | சுவிஸ் | 50000.00 |
| 3538 | பாலகுமார் சறோஜினி | சுவிஸ் | 100000.00 |
| 3539 | தமிழ்அழகன் | கனடா | 50000.00 |
| 3552 | விஜயமனோகரன் – ஜனகன் | இலண்டன் | 55000.00 |
| 3556 | N.குலசிங்கம் | அவுஸ்ரேலியா | 50000.00 |
| 3566 | சிட்னி முருகன் கோயில் | அவுஸ்ரேலியா | 526100.00 |
| 3574 | கா.துர்க்கா | சுவிஸ் | 750000.00 |
| 3583 | இந்துகலாசார அமைச்சு | கொழும்பு | 100000.00 |
| 3594 | மோகன் வசந்தராணி | கனடா | 50000.00 |
| 3617 | ஆறு திருமுருகன் | நல்லூர் | 100000.00 |
| 3637 | அபயகரம் | அவுஸ்ரேலியா | 3936899.00 |
| 3648 | சுந்தரலிங்கம் | சுவிஸ் | 55200.00 |
| 3703 | N.நவக்குமார் | வட்டுக்கோட்டை | 50000.00 |
| 3704 | பவகுமாநிஸி | பிரான்ஸ் | 50000.00 |
| 3753 | சு.செல்வராசா | கொழும்பு | 50000.00 |
| 3786 | S.நடேசபிள்ளை | கொழும்பு | 155750.00 |
| 3795 | குமாரசூரியர் | OSLO | 50000.00 |
| 3803 | M.இராஜகுலசூரியர் | கனடா | 250000.00 |
| 3830 | M.தனேந்திரன் | சுவிஸ் | 67308.65 |
| 3845 | கன்பரா தமிழ்ச் சங்கம் | | 85559.00 |
| 3876 | கனேசலிங்கம் சகானா | கோண்டாவில் | 100000.00 |
| 3894 | K.பாலசுந்தரம் | யாழ்ப்பாணம் | 100000.00 |
| 3909 | சுதன் திவாகா | கொழும்பு | 50000.00 |
| 3958 | ஈழநாதன் | சிங்கப்பூர் | 500000.00 |
| 3969 | க.பரஞ்சோதி | இலண்டன் | 75000.00 |
| 3991 | Dr.கையிலைநாதன் | கொழும்பு | 100000.00 |
| 4075 | மா.மணிவண்ணன் | கனடா | 50000.00 |
| 4083 | Dr.கிருஸ்ணவேணி | | 57000.00 |
| 4101 | சைவமன்றம் | சிட்னி முருகன் | 648300.00 |
| 4133 | வே.பாலேந்திரா | | 75000.00 |
| 4165 | சகிதேவி கந்தையா | U.K | 200000.00 |
| 4399 | Dr.சிவதி பிரதீபா | திருநெல்வேலி | சங்கிலி–45CM |
| 4437 | A.சிவபாலன் | கொழும்பு | 50000.00 |
| 4495 | Dr.ம.விமலதேவி | இலண்டன் | 100000.00 |


(30ம் பக்கம் பார்க்கவும்)


# துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின்
# புதிய விடுதிக் கட்டிடத்தின் மாதிரித் தோற்றங்கள்





# துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின்
# புதிய விடுதிக் கட்டிடத்தின் மாதிரித் தோற்றங்கள்





# இல்லக் கீதம்

### பல்லவி

வாழிய வாழியவே என்றென்றும்
மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று – வாழிய

### அனுபல்லவி

அன்னை துர்க்கை நிழலில் அணிதெல்லியூரினில்
பன்னிப் பரவிடும் பாவையர் இல்லம் என்றும் – வாழிய

### சரணம்

ஒழுக்கம் உயர் பண்பு உண்மையான கல்வி
விழுப்பம் தரும் என்றே மேலோர்கள் வார்த்தையை
மதித்து நடந்துமே வாழ்வெய்தி நாளுமே
மங்காப் புகழெய்தி மங்கையர் மாண்புற – வாழிய

காலையும் மாலையும் வழிபாடு பஜனை
கல்விக்கூடக் கல்வி யோகாசனமும்
கோசாலை தோட்டம் குடிசைக் கைத்தொழில்கள்
கொண்டு மிளிரும் துர்க்கா மகளிர் இல்லம் என்றும் – வாழிய

பெண்களே நாட்டின் கண்களெனப் புகழ்ந்து
மேதினியோர் என்றும் வியந்துமே போற்றுவர்
எங்கள் நல்வாழ்வும் இனிய செந்தமிழும்
எழில்மிகு சைவமும் ஏற்றமுற்று விளங்க – வாழிய.

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**மண்கும்பான் விநாயகர் ஆலயத்தில் பணமும் பொருட்களும் திருட்டு**

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. கருவறை உடைக்கப்பட்டு மூல விக்கிரகம் புரட்டி தகடுகள், ஒலிபெருக்கிச் சாதனங்கள், தேர்த்திருப்பணி உண்டியல் உடைக்கப் பட்டு பணம் திருடப்பட்டது.

**மூவர் தமிழும் சைவநெறியும் கருத்தரங்கு**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தேவாரத்தை அடிப்படை யாகக் கொண்டு 3 நாள் கருத்தரங்கு நடாத்துகிறது. யூன் 28, 29, 30 கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடை பெறவுள்ளது. பிரதம அதிதியாக மலேசியா முன்னாள் பிரதியமைச்சர் டான் ஸ்ரீகுமரன், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா கலந்துகொள்ளவுள்ளனர்.

**புங்குடுதீவு - மடத்துவெளி (வயலூர்) அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய கும்பாபிஷேகம்**

அதிசுந்தர இராஜகோபுர சகித புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் 28-06-2013 வெள்ளிக்கிழமை நடை பெற்றது. பிரதமகுரு வடகோவை சிவஸ்ரீ. முத்து. பாலகுமாரசாமி சிவாச்சாரியார்.

**முரசுமோட்டை சேற்றுக்கண்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோவில்**

வருடாந்த மகோற்சவம் 05-07-2013 ஆரம்பமாகி 14-07-2013 நிறைவடையும். பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியார்.

**சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம்**

சுன்னாகத்திலுள்ள மிகப் பழமை வாய்ந்த இக்கோவிலில் பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 28-06-2013 நடைபெறவுள்ளது. புதிய பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரதமகுரு சிவஸ்ரீ. சோ. சந்திர சேகரக் குருக்கள்.

**இணுவிலில் புதிய திருப்பதி திருவேங்கடேஸ்வரர் கோவில்**

இணுவில் காங்கேசன்துறை பெரு வீதியில் மிகப்பெரிய விக்கிர கங்களைக் கொண்ட அருள்மிகு பத்மாவதி தாயார் கோதை நாச்சியார் உடனுறை திருவேங்கடேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் 27-06-2013 நடைபெற்றது. பிரதம குரு. சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள். இவ்வாலயம் கனடாவில் வசிக்கும் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. S.கணேசலிங்கம்

அவர்களின் சொந்தச் செலவில் கட்டப்பட்டது.

**அனலைதீவு வடலூர் இராஜராஜேஸ்வரி அம்பாள் மகா கும்பாபிஷேகம்**

சரித்திரப் பிரசித்திபெற்ற இக் கோவில் கும்பாபிஷேகம் 21-06-2013 அன்று நடைபெற்றது. பிரதமகுரு பா.வை. தியாகராஜக் குருக்கள் (ஊரெழு)

**அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம் - கணேஸ்வரம்**

வருடாந்த பெருந்திருவிழா 13-07-2013 தொடங்கி 22-07-2013 வரை நடைபெறவுள்ளது.

**சங்கானை தெற்கு மாவடி ஞானவைரவர் மகாகும்பாபிஷே மலர் வெளியீடு**

சங்கானை மாவடி ஞானவைரவப் பெருமானின் கும்பாபிஷேகம் குறித்து ஆலய பரிபாலன சபையின் சிறப்பு மலர் வெளியீடு 26-06-2013 அன்று நடைபெற்றது.

**பருத்தித்துறை வல்லிபுரக்கோவில் கும்பாபிஷேகம்**

வல்லிபுர ஆழ்வார் கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் 26-06-2013 அன்று நடைபெற்றது.

**நல்லூர் வீரமாகாளி அம்பாளுக்கு புதியமணி மண்டபம்**

சரித்திரப் பிரசித்திபெற்ற வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் கோபுர வாயிலில் பல லட்சம் ரூபா செலவில் புதிய மணி மண்டபம் கட்டப்பெற்று 24-06-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது. தொழிலதிபர் திரு.பற்குணராஜாவின் தனி அன்பளிப்பில் இப்பணி நிறை வேற்றப்பட்டது.


**சைவத்தொண்டர் கந்தர்மடம் ஆறுமுகம் இறைபதம் அடைந்தார்**

மன்னார் மாவட்ட அரச அதிபராகப் பணியாற்றி இளைப்பாறிய இப்பெருந் தகை யாழ் சிவதொண்டன் நிலையத் தொண்டராக சேவையாற்றியவர். பல ஆலயங்கள் புராணப் படிப்பில் கலந்து கொண்டு உரை சொல்லிய பெரு மைக்குரியவர். சமீபத்தில் கொழும்பில் காலமானார்.

**பன்னிரு திருமுறை தெலுங்கு மொழியில் வெளியீடு**

பன்னிரு திருமுறைகளை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் நிதி யுதவியில் தெலுங்கு மொழியில் வெளி யிடப்பட்டுள்ளது. தருமபுர ஆதீனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ள தாக திருமுறையின் 'அம்பலம்' செய்தியுடகம் அறிவித்துள்ளது.

# சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்






18 JUL 2013

ANDRA DIGITAL PRINTERS T.P : 021 222 8929